# விஷ்வவாணி சமர்ப்பண்

Rs. 10/- | Vol. 33 - Issue 4 | April 2020

# நம்பிக்கையின் வானவில் தோன்றியது



# ஏழுபது பேரை நியமித்து...



இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபது பேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். லூக்கா 10 : 1

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷப் பிரபல்யத்திற்காக எப்பொழுதும் பேருதவியும் ஒத்தாசையும் அளித்து ஆதரித்து வரும் கோயம்புத்தூர் CSI கிறிஸ்து ஆலய சபையாரை நினைக்கும் பொழுதெல்லாம் தேவனை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துகிறோம்.



23.02.2020 அன்று, இமயமலையடிவாரம், அசாம், ஜார்க்கண்டு, குஜராத், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கடு, மகாராஷ்டிரா ஆகிய 7 பிராந்தியங்களின் 70 ஊழியர்களை அன்புகலந்த இதயங்களுடன் ஏற்றுக்கொண்டு, பிரதிஷ்டை செய்து, இயேசுவின் நாமத்தில் ஆசீர்வதித்து தளங்களுக்கு அனுப்பிவைத்த தலைமை போதகர் Rev. H. ஜாண் குணசீலன் ஐயா அவர்களுக்கும், உதவி போதகர் Rev. ஆஸ்டின் ஐயா அவர்களுக்கும் விஷ்வவாணி ஊழியர்கள், பிரதிநிதிகள் சார்பில் மிகுந்த நன்றி கூறுகின்றோம்.

ஆராதனை, சிறப்புக்கூடுகைக்கு எல்லா விதத்திலும் பேராதரவு, நல்லாலோசனைகள் வழங்கி, கர்த்தரின் மகிமைக்கேதுவாய் நடத்தித் தந்த திருச்சபையின் செயலாளர் திரு. J.P. ஜேக்கப் அண்ணன், பொருளாளர் திரு. பரமானந்தம் அண்ணன், கமிட்டி அங்கத்தினர் யாவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம். ஊழியர் தங்குமிடம் தந்து உதவிபுரிந்த Rev. அருள் அவர்களின் ஊழியங்களைக் கர்த்தர் பெருமளவில் ஆசீர்வதிப்பாராக. திரு. J.N. ஜேக்கப் அண்ணன் அவர்களது அன்பின் சகாயங்களை எண்ணி தேவனை மனதார போற்றுகிறோம். 70 ஊழியர்கள் – ஊழியக் கிராமங்களைப் பொறுப்பேற்றுள்ள குடும்பங்களைக் கர்த்தர் வர்த்திக்கப்பண்ணி, தளங்களை தம் அன்பின் சுவிசேஷத்தினால் நிரப்புவாராக. – கிங்ஸ்லி, ஒருங்கிணைப்பாளர்.

# அப்புறமான கிராமங்களுக்குப் பத்து ஊழியர்கள்

விருதுநகர் CSI தூய யோவான் ஆலயத்தில் 23.02.2020 அன்று பத்து ஊழியர்களைப் பிரதிஷ்டை செய்து, தளங்களுக்கு அனுப்பிவைத்த தலைமை போதகர் Rev. J. ஜோ டேனியல் ஐயா அவர்களுக்கும், இவ்வூழியர்களின் கிராமங்களுக்காகத் திறப்பில் நிற்கும் விசுவாசக் குடும்பங்கள், சபை யார், பணியின் பிரதிநிதிகள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் அன்புகலந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

– G. தேவராஜ், ஒருங்கிணைப்பாளர்.



## எமில் அண்ணனின் **சிந்தனை வரிகள்**

- மனம் மாற்றம் என்பது கர்த்தரின் சத்தத்திற்கு மனம் சம்மதிப்பது;
  மத மாற்றம் என்பது மனித சித்தத்திற்குத் தலைகுனிவது!
- மத மாற்றம் மனிதனை மனிதனைவிட்டுப் பிரிக்கின்றது;
  மன மாற்றம் மனிதனை மனிதனுடன் இணைக்கின்றது!
- வற்புறுத்தி உருவாகுவது மத மாற்றம்;
  வலிய உருவாகுவது மன மாற்றம்!
- மதம் வெறியைத் தூண்டுகின்றது; யானைக்கும் மதம் பிடிக்கின்றது!
- மதமாற்றம் என்ற குதிரையில் ஓடும்வரை பெயர் சவுல்;
  மனமாற்றம் என்ற பாதையில் முகம் குப்புற விழுகையில் பெயர் பவுல்!
- கேட்பதற்கும் உரிமை உண்டு; கேட்பதை ஏற்பதற்கும் உரிமை உண்டு;
  உரிமை மனிதனின் தனிப்பட்ட உடமை;
  அதனைப் பறிப்பது மனிதனை அவமதிப்பது!



**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷம்**
**இந்தியக் கிராமங்களை ஆசீர்வதிப்பதைக் காண்பதே விஷ்வவாணி பணியின் தரிசனம்!**


**விஷ்வவாணி சமர்ப்பண்**

APRIL
2020

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை
தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி,
குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, பெங்காலி, ஆங்கிலம்,
காக்பொராக், சோரா ஆகிய 12 மொழிகளில்
பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது.
ஆண்டு சந்தா ரூ. 100/-.



**பதிப்பு அலுவலகம்**
1-10-28/247, ஆனந்தபுரம்,
குஷாய்குடா, E.C.I.L. P.O,
ஹைதராபாத் - 500062
✆040-27125557.
E-mail: samarpan@vishwavani.org

**நிர்வாக அலுவலகம்**
20, ராகுல் தெரு, TMP நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை – 600053
✆044-26869200
E-mail: vishwavaninet@vishwavani.org


## பருகப்போவது


3 சிந்தனைக்கு
4 நிர்வாக இயக்குநர் கடிதம்
8 சிறப்புக் கட்டுரை
10 ஓர் பிரார்த்தனை
11 அன்பின் பகிர்வுகள்
15 சின்னச்சின்ன உணர்வுகள்
18 நீர் என்னை விசாரிக்கவேண்டியதென்ன
20 திருமறை ஆய்வு
22 ஜெப ஒருங்கிணைப்பாளரிடமிருந்து
25 பணித்தளச் செய்திகள்

கர்த்தருடைய ஊழியத்தில் தளராது முன்னேறும் உங்களுக்கு,

# நிர்வாக இயக்குநரின் செய்தி மடல்...

கிறிஸ்துவில் மிகவும் பிரியமான பணிப் பங்காளர்களே,

உயிர்த்தெழுந்த இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்.

மீண்டும் ஒரு புதிய நிதியாண்டை காணச்செய்த கர்த்தாதி கர்த்தரை உளமார துதிக்கிறேன். கடந்துவந்த நிதியாண்டின் அனைத்து நாட்களிலும் கர்த்தர் எல்லாவற்றிலும் போதுமானவராக இருந்தார். நீங்களும் இப்பணியில் தளராது ஜெபித்தீர்கள், அயராது உழைத்தீர்கள், உதாரத்துவமாக அள்ளிக் கொடுத்தீர்கள் என்பதை நன்றியுடன் நினைவுகூருகிறோம். கர்த்தரின் பேராசீர்வாதம் உங்களுக்கு உண்டாயிருப்பதாக; 2020-'21ம் ஆண்டிலும் உங்களது பங்கு திரளாயிருப்பதாக.

## உலகில் பாவத்தின் நுழைவு, பெருக்கம், தாக்கம்!

ஆதியிலே தேவாதி தேவன் மிக நேர்த்தியாக சிருஷ்டித்த வானம், பூமியில் அமைந்திருந்த 'ஏதேன்' ஓர் செழிப்புள்ள ஆசீர்வாதமான பூங்காவனமாக திகழ்ந்தது. அதில் அமைதி, மகிழ்ச்சி, தேவப் பிரசன்னம் நிறைந்த சமாதான வாழ்வு பொங்கி வழிந்தோடிய நிலையில், ஆதிப் பெற்றோரின் கீழ்ப்படியாமையின் மூலம் பாவம் உலகில் உருவெடுத்தது. சத்துருவின் தந்திரத்தினால் விழுந்துபோன மனுக்குலத்தை சாபம், மரணம், வன்முறை மேற்கொண்டன. மனிதரின் அக்கிரமம் பூமியிலே பெருகி, கொடுமையினால் நிறைந்து, சீர்கெட்டுப் போனது! எனவே, கர்த்தர் மாம்சமான யாவற்றையும் அழித்து, பூமியைச் சீர்படுத்தினார் என்றும், நீதிமானாகிய நோவாவின் குடும்பம் மாத்திரம் பேரழிவிலிருந்து காக்கப்பட்டது என்பதையும் பரிசுத்த வேதாகமம் விவரிக்கிறது. (ஆதி. 3:1-8; 6:1-13; 9:1-7).

## மனித நம்பிக்கையின் வானவில் இயேசு கிறிஸ்துவே!

வீழ்ந்துபோன மனுக்குலத்தை தூக்கி நிறுத்த கர்த்தாதி கர்த்தரின் மகத்தான இரட்சிப்பின் திட்டமும் (ஆதி. 3:15), நம்பிக்கையின் வாக்குத்தத்தமும் (ஆதி. 9:11-17) உடன்படிக்கையும் மனுக்குலத்துக்கு உறுதிப்படுத்தப்பட்டது. 'வானவில்' என்பது மனுக்குலத்தின்மேல் தேவாதி தேவன் வெளிப்படுத்தும் அன்பு, கிருபை, கரிசனை, பொறுமை, வாக்குறுதி, மீட்பு மற்றும் ஆசீர்வாதத்தை பிரதிபலிக்கிறது. இயற்கையின் சீற்றத்திற்குப் பின் ஒளி ஊடுருவும்போது தோன்றும் 'வானவில்' வானத்தையும் பூமியையும் இணைக்கும் ஓர் பாலமாக பிரகாசமாய்க் காட்சியளிக்கின்றது.

அதுபோல, பாவ மனுக்குலத்தையும் பரிசுத்த தேவனையும் ஒப்புரவாக்கும் பாலமாக 'இயேசு கிறிஸ்து' இப்புவியில் இரட்சகராக வெளிப்பட்டார் (லூக்கா 16:26; கொலோ. 2:13-15; 1 தீமோ. 2:4-6). உலகத்தாரின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக கல்வாரி சிலுவையில் தன்னையே தியாக பலியாக ஒப்புக் கொடுத்தார் (1 பேதுரு 1:18-20; எபே. 2:1; யோவான் 6:44). இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் மூலம் பாவ மனுக்குலத்திற்காக ஓர் 'நம்பிக்கையின் வானவில்" இன்றும் நமக்கு முன் பிரதிபலிக்கின்றது. நித்தியமான வாழ்வு இயேசுவில் நமக்கு உண்டு என்பதை நிச்சயப்படுத்துகின்றது.

## உங்கள் வாழ்வில் தோன்றும் நம்பிக்கையின் வானவில்:

பரிசுத்த வேதாகமத்தில் நோவாவின் காலத்தில் முதலாவது ஏற்பட்ட வானவில் 'இயற்கையின் பேரழிவிற்குப் பின்பு' தோன்றியது. தேவனால் மனுக்குலத்துடன் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையை நிலைப்படுத்தியது (ஆதி. 9:16).

அதுபோல, பாவத்தில் மரித்த மனிதர்களை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியால் உயிர்ப்பித்து, பிதாவாகிய தேவனோடு ஐக்கியப்படுத்தி, (Peace with God) புது நம்பிக்கையை ஏற்படுத்துவதே நமது பிரதான பணியாகும்.

இரண்டாவதாக, எசேக்கியேல் 1:28ல் மழைபெய்யும் நாளில் தோன்றிய வானவில் நம் வாழ்வில் ஏற்படும் தேவ சமாதானம் (Peace of God), மகிமைப் பிரகாசத்தைக் குறிப்பிடுகிறது. நம் ஜீவியத்தில் இடம்பெறும் போராட்டங்கள் மத்தியில் நாம் அனுபவிக்கும் ஓர் தெய்வீக சமாதானத்தை ஒருவரும் பறிக்க இயலாது என்பதை சுட்டிக்காட்டுகிறது. “என் சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்” என்று இயேசு கூறுகிறார் (யோவான் 14:27). எனவே எதிர்காலம் குறித்து நாம் கலங்கவேண்டியதும் பயப்பட வேண்டியதும் இல்லை!

மூன்றாவதாக, வெளிப்படுத்துதல் 4:3ல் சிங்காசனத்தைச் சுற்றி வானவில் இருந்ததாகவும், வெளி. 10:1ல் பலமுள்ள தூதனின் சிரசின்மேல் வானவில் பிரகாசித்ததாகவும் நாம் வாசிக்கிறோம். போராட்டம், பாடுகள் இல்லாத ஓர் மகிமையான வாழ்வை இது தெளிவுபடுத்துகிறது. அத்துடன் வெளி. 10:6ல் ‘இனி காலம் செல்லாது’ என்கிற எக்காள சத்தம் உண்டானது!

ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை “சீக்கிரமாக ஓர் நியாயாதிபதியாக வரப்போகிறார்” என்பதே அந்த எச்சரிப்பின் செய்தி! பாவிகளின் கூட்டத்திலே சங்கமிப்பவர்களுக்கு இது ஓர் அபாயச் செய்தி! பரிசுத்தவான்களின் கூடாரத்திலே தரிப்பவர்களுக்கு இது ஓர் ஆறுதலின் செய்தி! இதை வாசிக்கும் உங்களுக்கு?

**தரிசனத் தடத்தில் தீவிரமாய் முன்னேறிச் செல்லும் ஓர் புதிய நிதி ஆண்டு:**

ஏப்ரல் 1, 2020ல் துவங்கும் புதிய நிதியாண்டில் நுழைய விருப்பம் கொண்டிருக்கும் நாம், மேலும் நம்மை நடத்திச் செல்லும் சேனைகளின் கர்த்தரை நன்றியுடனும் நம்பிக்கையுடனும் கீழ்ப்படிதலுடனும் பின்தொடர்வோமாக. முன் வரும் 12 மாதங்களில் 2000 புதிய எஸ்றாக்களைப் பயிற்றுவித்து, 10,000 புதிய ஊழிய கிராமங்களில் சுவிசேஷ தீபமேற்றிட ஜெபத்துடன் பிரயாசப்படுகிறோம். ஜெபக்குழுக் களை முன்நின்று நடத்தும் பொறுப்பாளர்கள், தன்னார்வமாக பணியில் இணைந்து ஜெபிக்கும் பிரதிநிதிகளை முன்வைத்து செயல்படுத்த வாஞ்சிக்கிறோம். கர்த்தர் உங்களைப் பாரப்படுத்தினால் எங்களுடன் கரம்கோர்க்க அன்புடன் அழைக்கிறோம். ஊழியர் பணிபுரியும் ஒரு கிராமத்திற்கு மாதம் ரூ. 3000/- கொடுத்து, நற்செய்தி எட்டாத பகுதிகளை ஆசீர்வதிப்போம் வாருங்கள். இப்புதிய நிதியாண்டில் நமது ஊழியத்தின் பட்ஜெட் ரூ. 80 கோடி. மாதந்தோறும் நம் பணியின் தேவை ரூ. 6.5 கோடி. உங்கள் ஜெபங்கள், தியாக ஈகை, ஈடுபாடு இன்னும் திரளாகட்டும். கிறிஸ்துவின் மந்தை இன்னும் பெருகட்டும்!

**ஆயிரம் ஆயிரம் ஊழியர்கள் அனுப்பப்பட பிரயாசமெடுப்போம்:**

விஷ்வவாணி ஊழிய வரலாற்றில் 40 ஆண்டுகள் தரிசன இலக்கை நோக்கி நம்மை முன்நடத்திச்செல்லும் கர்த்தாதி கர்த்தரை உளமார நன்றியுடன் துதிப்போமாக. ஆரம்ப நாட்களில் வானொலிப் பணியாக, 1987 ஜூலை 15ல் அது பதிவுபெற்ற மிஷனெரிப் பணியாக – ஒருவரும் பணிபுரிந்திராத இடங்களில் திருச்சபைகளைக் கட்டும் பணியாக நம் இலக்கை நோக்கி முன்னேறுகிறோம். இந்நேரத்தில் நம் மதிப்பிற்குரிய எமில் ஜெபசிங் அண்ணன் அவர்களை அதிகம் நினைவுகூரவும், தரிசனத் தடத்தில் இன்னும் ஆழமாக நம்மை ஈடுபடுத்தி, செயல்படவும் ஏவப்படுகின்றோம்.

கர்த்தருக்குச் சித்தமானால், 2020 மே 1-3ல் தூத்துக்குடியில் வைத்து “இயேசுவை அறியாத 1000 கிராமங்களுக்கு 1000 ஊழியர்களை ஜெபித்து

அனுப்பும் நிகழ்வு', CSI தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலத்தின் பேராயர் Rt. Rev. Dr. S.E.C. தேவசகாயம் ஐயா அவர்களின் தலைமையில் இடம்பெற இருக்கிறது. மிஷனெரிப் பணி வரலாற்றில் இது ஓர் முக்கியமான நிகழ்வு. எனவே, தாங்கள் அவசியம் குடும்பமாகப் பங்குபெற வேண்டுமென அன்புடன் அழைக்கிறோம். மேலும், நீங்கள் ஒரு கிராமத்திற்கு ஊழியரை அனுப்பி, தாங்கி ஆதரிக்கலாம்.

'நம் கால மனிதர் இயேசுவை அறிய நம்மைத் தவிர யாருமில்லை' –எமில் அண்ணன்

**விஷ்வவாணி வேனிற்கால வேதாகமப் பள்ளி :**

ஜம்மு–காஷ்மீர் துவக்கம் கர்நாடகா வரையிலான நமது தளங்களில் – புதிய விசுவாசிகள் கூடும் ஆராதனை குழுக்களில் 25,345 சிறுவர், சிறுமியர் உண்டு. அவர்களுக்கானப் பிரத்யேக முகாம்களும், பள்ளிகளும் வேனிற்கால விடுமுறையில் இடம்பெறவுள்ளது. இச்சிறார்களுக்காக ஜெபிக்கவும், இவ்வூழியத்திற்காக இயன்ற மட்டும் பொருளுதவி புரியவும் பட்சமாய்க் கேட்கின்றோம்.

**நம் பிள்ளைகளின் உயர்கல்வி மற்றும் எதிர்காலங்கள் :**

தேர்வு, உயர் கல்வி, வேலை வாய்ப்புகள், திருமணம், குழந்தை பாக்கியம், தூரப் தேசப் பிரயாணங்கள், தொழிற் பிரயாசங்கள், வியாபார முயற்சிகள் ஆகிய பற்பல எதிர்பார்ப்புகளுடன் கர்த்தரின் பாதத்தில் காத்திருக்கும் உங்களுடன் எங்கள் ஜெபம் எப்போதும் உண்டு. 'உன் நம்பிக்கை வீண்போகாது' என்பதே தேவ வாக்கு!

**ஊழியர், ஊழியத் தலைவர்களுக்கானப் பயிற்சி:**

குஜராத் – நவபாடா பயிற்சி நிலையத்தில் 20 புதிய ஊழியர்களும், திரிபுரா – விஷ்வவாணி காமி பயிற்சி வளாகத்தில் 40 புதிய ஊழியர்களுமாக 60 பேர் முழுநேரப் பணிக்கானப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஜெபத்தில் தாங்குங்கள்.



மார்ச் 4–6ல் ஹைதராபாத் பயிற்சியகத்தில் நடத்தப்பட்ட ஊழியத் தலைவர்களுக்கான பயிற்சி, இக்கால ஊழியத்திற்கு உகந்த அணுகுமுறை அறியவும், ஆவிக்குரிய ரீதியில் ஸ்திரப்படவும், தேவ வசனங்களின் ஆழங்களை ஆராயவும் வாய்ப்பு அருளியது. வளாகத்தில் கற்றவைகளைத் தம் தம் பிராந்திய ஊழியர்களுக்குக் கற்பிக்கச் சென்றுள்ள 35 ஊழியத் தலைவர்களுக்காக ஜெபியுங்கள். தளங்களில் அறுவடை திரளாக வேண்டிக்கொள்ளுங்கள்.

**தரிசன விரிவாக்கப் பணியில் திருச்சபைகளின் பங்கு:**

சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை, சபையில்லாமல் ஊழியமும் இல்லை! விஷ்வவாணி நற்செய்திப் பணி, அனைத்து திருச்சபைகளுடனும் இணைந்து, அறியப்படாத இடங்களில் இயேசுவை அறிவிக்க முனைப்புடன் செயல்படுகிறது. 16.02.2020 அன்று திருப்பூர் CSI தூய பவுல் ஆலய ஆராதனையில் 33 வட இந்திய ஊழியர்களை பிரதிஷ்டைசெய்து, மிகுந்த ஊக்கமளித்த Rev.S. வில்சன் குமார் ஐயா, திருச்சபை பொறுப்பாளர்களுக்கு நன்றிகூறுகிறேன். 19, 20ம் தேதிகளில் தூத்துக்குடி மாவட்டத்தின் நாலுமாவடி, கோவில்பட்டி, தூத்துக்குடி நகர்ப்புற சுயாதீன சபைப் போதகர்களுக்கான சிறப்புக் கூடுகை இடம்பெற்றது. சுவிசேஷப் பணியில் ஜெபத்துடன் கரம்கோர்த்து பணிபுரிய அவர்கள் எடுத்துக் கொண்ட நல்தீர்மானங்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாக்கியது. பங்கேற்ற சபை போதகர்களுக்கு நன்றிகூறுகிறேன்.

22ம் தேதி சென்னை மந்தைவெளி CSI. தூய லூக்கா ஆலயத்தில் இடம்பெற்ற

தரிசனக் கூடுகை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. ஆயர் Rev. கிளமெண்ட் ஜெயந்தி ராஜன் ஐயா, கமிட்டி உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். 23 ஞாயிறு அன்று சென்னை விருகம்பாக்கம் அட்வெண்ட் திருச்சபையில் செய்தியளிக்கவும் பணி அறிமுகம்செய்யவும் வாய்ப்பு தந்த போதகர் Rev. Dr. அருள்தாஸ் ஐயா, மற்றும் சபையாருக்கும் நன்றிகூறுகிறேன். மார்ச் 8ம் தேதி தூத்துக்குடி CSI கால்டுவெல் ஞாபகார்த்த ஆலயத்தில் செய்தியளிக்க வாய்ப்பு அளித்த சபை குருவானவர் Rev. பிராங்க்லின் ஐயா, கமிட்டி உறுப்பினர்கள், பிரதிநிதிகளுக்கு நன்றி கூறுகிறேன்.

**பணிப் பங்காளர்களுக்கு அன்பின் வேண்டுகோள்:**

தேவ பணியில் விசுவாசிகளுக்குக் காத்திருக்கும் பங்கும் பயனும் என்ன என்பதை தெரிவிக்கவும், பணியின் தரிசனம், ஊழியத் தேவைகளை தேவ ஜனங்கள்முன் வைக்கவும் விரிவாக்கப்பணி ஊழியர்கள் தேவை. தேவனால் முழுநேரப் பணிக்கு அழைப்புபெற்றவர்கள் தயவாய் முன்வாருங்கள். புதிய நிதியாண்டிற்கான சமர்ப்பண் சந்தாவை தயவுகூர்ந்து புதுப்பியுங்கள். உங்கள் சேமிப்புப்பெட்டி ஈகை, கிராமத் தத்தெடுப்புத் தொகைதனை குறித்த மாதத்திற்குள் செலுத்தித் தாங்குங்கள். பணித்தளங்களுக்கு அவசியமாகும் இரு சக்கர வாகனங்கள், ஒலிப்பெருக்கிகள், இசைக்கருவிகள் போன்ற தேவைகளுக்குக் கரங்கொடுங்கள். வட இந்திய கிராமங்களில் ஆலயக் கட்டடத்திற்கான நிலம் வாங்க, சதுர அடிக்கு ரூ. 2000/- வீதம் கொடுத்து உதவுங்கள். தேசத்திற்காக நாம் இணைந்து ஜெபித்து, தேவ இராஜ்யத்தை விரிவாக்குவோமாக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்". ஆதி. 9:1

சென்னை - 53
13.03.2020

கிறிஸ்துவின் பணியில்,
W. வில்சன் ஞானக்குமார்

## நம்பிக்கையின் பக்கங்கள்

அஞ்சற்காரர் வந்து எங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, ஓர் மாதாந்திர இதழைத் தந்து சென்றார். அது விஷ்வவாணி சமர்ப்பண் மாத இதழ். 'நேற்றும் இன்றும் மாறாதவர், உன்னையும் என்னையும் நடத்துகிறவர்' என்று முன் அட்டையில் எழுதியிருக்கக் கண்டேன். பல வருடங்களாக என் மனைவியின் மாறாத நோய்களுக்காக, மருத்துவம் பல செய்தும் தீராத பெலவீனங்களுக்காக, கண் கலங்கி நின்ற வேளையில் தான் என் கண்களில் அந்த தலையங்கம் பதிந்தது. தொடர்ந்து பின் அட்டை வரை அனைத்துப் பக்கங்களையும் வாசித்துவிட்டு, முழங்காற்படியிட்டோம். கைவிடப்பட்டவள் என்ற நிலையிலிருந்த என் மனைவிக்குக் கர்த்தர் கரங்கொடுத்தார்; சர்வாங்க சுகம்கொடுத்து எங்கள் அழுகையைக் களிப்பாக்கினார். நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு கிறிஸ்துவுக்குக் கோடி ஸ்தோத்திரங்கள்.

- ரெஜின், மாத்திரக்கல் விளை

## அப்புறமான கிராமங்களுக்கு அறுவடையாளர்களை அனுப்பினார்கள்





மார்ச் 8 அன்று கோவில்பட்டி – ஆல் கம்யூனிட்டி சபையில் இடம்பெற்ற ஊழியர் பிரதிஷ்டை ஆராதனையில் ஆந்திரப்பிரதேசத்தின் சந்திகுடா தள ஊழியரான A. ஈனத்குமாரை இயேசுவின் நாமத்தில் பிரதிஷ்டை செய்த சபையின் தலைமைப் போதகர் பாஸ்டர் துரைராஜ் ஐயா அவர்களுக்கும் உதவிப் போதகர் பாஸ்டர் சுரேஷ் மற்றும் சபை குடும்ப அங்கத்தினர்களுக்கும் அன்பின் நல் வாழ்த்துக்கள் கூறுகின்றோம். மேலும் இந்நாளில் எட்டிச்சேரி பெந்தெகோஸ்தே திருச்சபையின் ஆராதனையில் ஆந்திராவின் பொடி தள ஊழியர் B. முரளி அவர்களை அப்புறமான கிராம ஊழியங்களுக்கென்று பிரதிஷ்டை செய்து அனுப்பிவைத்த பாஸ்டர் புஷ்பராஜ் அவர்களுக்கும் தாங்கும் குடும்பங்களுக்கும் மிகுந்த நன்றிகூறுகின்றோம்.

— கோவில்பட்டி ஊழியர்

ஏப்ரல் 1999 சமர்ப்பண் இதழுக்காக எமில் அண்ணன் எழுதிய கட்டுரையின் மறுபதிப்பு

# நம்பிக்கையின் வானவில் தோன்றியது

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்
மனிதர்கள் அனைவருக்கும் புதிய நம்பிக்கை தருகின்றது.
பாவம், பாவம் செய்வதால் வரும் விளைவு இரண்டிலிருந்தும்
மனிதர்களுக்கு விமோசனம் உண்டு என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற நம்பிக்கை,
பாவம்செய்யும் ஆத்துமா சாவதில்லை என்ற நம்பிக்கை,
பாவத்தின் சம்பளம் மரணமாகப் போவதில்லை என்ற நம்பிக்கை
கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலமாகக் கிடைக்கப் பெறுகின்றது.

என் மாம்சம் மரணத்திற்குப் பின்னும் நம்பிக்கையுடன் தங்கியிருக்கும் என்பதை
அப்போஸ்தலர் 2:26வது வசனம் தெரிவிக்கின்றது.
மனிதனின் தைரியம் மரண வேளையில் மங்கி எரியும் விளக்காக மாறுகின்றது.

மரணத்தைச் சந்திக்க வலுப்பெற்ற தைரியவான்கள் ஒருவரும் இல்லை.
ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை
வாழ்க்கையில் அறிந்தவர்கள் மரணத்தில் மருளுவது இல்லை,
மகிழ்வார்கள் என்பதே இயேசு தரும் நம்பிக்கை.

நோவாவின் நாட்களில் இடம்பெற்ற பிரேத வெள்ளம் இனி வேண்டாம் என்பதைத்
தெரிவிக்கக் கர்த்தர் வானவில் தந்தார்.
பாவம் செய்தவர் சாவையே சந்திக்கவேண்டும் என்ற பயம்
இனி மனிதருக்கு வேண்டாம் என்பதைத் தெரிவிக்க வானவில் பிறந்தது!
உயிர்த்தெழுந்த இயேசுவின் சிங்காசனத்தைச் சுற்றிலும்
அந்த வானவில் நிற்கின்றது என்பதையும் வெளி. 4:3ம் வசனம் கூறுகின்றது.

மனித நெஞ்சத்தில் பாவம் தங்காமல் பரிசுத்தம் தங்கவும்,
பயம் தங்காமல் தைரியம் தங்கவும்
நம்பிக்கையின் வானவில் மனிதனுக்குப் பிறந்தது.
உயிர்த்தெழுந்த நாளில் பிறந்தது.
"உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி,
அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்" என்று
1 பேதுரு 1:21வது வசனம் கூறுகின்றது.

நமது விசுவாசம், நமது நம்பிக்கை மனிதன் மீது அல்ல, நம் மீதும் அல்ல,
கர்த்தராகிய இயேசுவின் மீது இருக்கும்படியாக இயேசு உயிர்த்தெழுந்தார்.
அந்த நம்பிக்கையைக் குறித்துக் கேள்விகள் கேட்கும் அனைவருக்கும்
அன்புடனும், அமைதியுடனும் பதில் கூறுங்கள் என்று
1 பேதுரு 3:15வது வசனம் கூறுகின்றது.
"உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து
உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும்
சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல
எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று அந்த வசனம் கூறுகின்றது.

கேள்விகள், எதிர்ப்புகள் நோக்கி வரும்பொழுது

சீற்றங்கள், வன்முறைகள் வேண்டாம்.
கோபங்கள், பதிலுக்குப் பதில்களும் வேண்டாம்.
சாந்தமும் சமாதானமும் வேண்டும் என்று பரி. பேதுரு கூறுகிறார்.

“நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்;
அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை” என்று
பரி. யாக்கோபு 5:6வது வசனம் கூறுகின்றது.
உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்த
ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரண்டு ஆண் பிள்ளைகள்
உயிரோடு சுட்டெரிக்கப்படும்பொழுது அவர்கள் எதிர்த்து நிற்கவில்லை.
மேன்மையான உயிர்த்தெழுதலுக்குத் தங்களை ஒப்படைத்தார்கள்.

“பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி
உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து
ஏதோ புதுமையென்று திகையாமல்,
இயேசு கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது
நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக
அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்”
என்று 1 பேதுரு 4:12,13 ஆகிய வசனங்கள் கூறுகின்றது.

ஒடிசா, குஜராத் மற்றும் பற்பல இடங்களில் இடம்பெறும்
இடையூறுகளைக் கண்டு போர்க்கொடி வீசுவதற்கு
முழுநேர ஊழியர்கள் அழைக்கப்படவில்லை.
அன்பின் கயிறுகொண்டு கட்டுவதற்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதைக்
கல்வாரியின் அன்பு தெரிவிக்கின்றது.

மிஷனரிகள், ஞானஸ்நானங்கள், மதமாற்றங்கள் என்ற சொற்கள்
இதுவரை சுவிசேஷ ஊழியம் செய்யும் ஸ்தாபனங்களின்
மாத இதழ்களில் மட்டுமே இருந்தது; இன்று அனைத்து நாளிதழ்களிலும் வந்தது.

மதமாற்றம் வேறே, மனமாற்றம் வேறே என்பது
அனைவராலும் கோடிட்டுக் காட்டப்படுகின்றது.
இடம்பெற்ற திருமுழுக்குகள் நிஜமானதாக இருந்தால்
பணிகளின் முன்னேற்றம் நிச்சயமானதாக இருக்கும் என்பது
இன்று தெளிவாகியது.

விஷ்வவாணி நற்செய்திப்பணியின் பணித்தளங்களிலும்
வன்முறையாளர்களின் வருகை இடம்பெற்றது உண்டு.
இனிய முகத்துடன், அகத்தில் அன்புடன்,
அங்கு பணிபுரியும் சுதேச ஊழியர்கள்
அதனைக் கடந்து சென்றதும் உண்டு.

“உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.
ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” என்று
பாவத்தையும் உலகத்தையும் மரணத்தையும் ஜெயித்த
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரி. யோவான் 16:33வது வசனத்தில் கூறினார்.

இன்று நமது தேசத்தில் இடம்பெற்று வரும் நிகழ்ச்சி
உண்மையுடனும் ஒழுக்கத்துடனும் பணிபுரியும் அனைவருக்கும்
பெரும் ஆசீர்வாதங்களை அருளும் நிகழ்ச்சி!

சுதேச ஊழியர்கள், இந்திய விசுவாசிகளின் ஈகைகள்,
திருமுழுக்கு பெறுவோரின் திட சாட்சிகள்
அனைத்தும் ஒருங்கே பெற்று முன் செல்லும்
விஷ்வவாணி நற்செய்திப்பணியில் நம்பிக்கையின் வானவில் தெரிகின்றது.

தேசமே தேசமே தேசமே, கர்த்தருடைய வார்த்தையைக் கேள் என்ற
நம்பிக்கையுடன் கூறும் வானவில் தெரிகின்றது.

அனைத்து விசுவாசங்களுக்கும் சம மதிப்பும், சம மரியாதையும்
சட்டத்தில் பெற்ற பாரத தேசத்தில்
அனைவருக்கும் அன்புசெலுத்தி, மனத் தாழ்மையுடனும்,
மன உண்மையுடனும் பணி செய்கின்றவர்களுக்கு
கனிகள் காத்து நிற்கின்றது என்ற வானவில் தெரிகின்றது.

சுவிசேஷப் பணியில்
பின்வாங்கும் காலம் அல்ல, முன்னோக்கும் காலம்!

தேசத் தலைவர்களையும் கேள்வி கேட்பவர்களையும்
இழிவாகப் பேசுவது அல்ல, கனிவுடன் பேசி,
“அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள்” என்பதைக் காட்டும் காலம்!

சுவிசேஷப் பணியில் படும் துன்பங்களைப் பெரிதுபடுத்தி
மனித பரிதாபங்களைத் தேடும் காலம் அல்ல,
இயேசுவின் நாமத்திற்காக அவமானம் அடைவதற்குப் பாத்திரவான்களானோம்
என்று சந்தோஷப்படும் காலம்!

இன்று நமது தேசத்தில் சுவிசேஷப் பணியில்
இடம்பெறும் இன்னல்களை இன்பமாக ஏற்று,
பணித்தளங்களில் காணும் துன்பங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று,
தேவ அன்பினால் நிரம்பப் பெற்று ஊழியம் செய்யும் அனைவருக்கும்
ஊழியத்தில் நம்பிக்கையின் வானவில் தோன்றியது! அல்லேலூயா!

## ஓர் பிரார்த்தனை

அன்பு நிறைந்த கர்த்தாவே, சிலுவையில் சித்ரவதை கண்ட வேளையில்
அன்பையே அள்ளிக்கொடுத்தீர். எங்களுக்கும், பணியில் தொல்லைகள்
துன்பங்கள் வரும் வேளையில் அன்பையே பண்பாகத் தாரும்!
கோபத்தில் ஓங்காதபடி செய்யும், முழங்காலில் ஓங்கச் செய்யும்!
சத்தமிடாத ஆட்டைப் போன்று சங்கரிக்கப்பட தம்மை ஒப்படைத்தவரே,
நாங்கள் படும் துன்பங்களை மனிதரிடம் சத்தமிட்டுக் கூறாதபடி செய்யும்.
கர்த்தரிடம் மட்டுமே சத்தமிட்டுக் கூறச் செய்யும்.
எங்கள் உணர்ச்சிகள் பொங்காதபடி செய்யும். அன்பு மட்டுமே பொங்கச்செய்யும்.
கர்த்தருடைய ஊழியம் மனிதரின் இரத்தம் துடிப்பதினால் அல்ல,
இயேசுவின் இரத்தத்தின் வல்லமையினால் என்பதை
எங்கள் இதயங்கள் அறிந்துகொள்ளச் செய்யும்.
பயப்படாதே, சிறுமந்தையே என்றவரே,
கர்த்தரை மேய்ப்பராகக் கொண்ட ஊழியங்களுக்கு
பயம் இல்லை என்பதற்காக ஸ்தோத்திரம்!
நல்ல மேய்ப்பர் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# அன்பின் பகிர்வுகள்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

'தேவ் பூமி' என்றழைக்கப்படும் மாநிலமாகிய இமாச்சலப் பிரதேசத்தில், குறிப்பாக அம்மலையடுக்குகளின் பனிகள்மீது படர்ந்து கிடக்கும் பணி கிராமங்களில் கால் பதிக்கும் ஊழியர்கள் – தேவ ஜனங்களின் உள்ளங்களில் பரிசுத்தாவியானவர் ஆழமாய் எழுதுவது: "பர்வதங்களின் உயரங்கள் அவருடையவைகள்" (சங். 95:4) என்பதாகும். ஆம், கடந்த மாதப் பயணத்தின்போது அந்த ஜீவ வசனத்தை அனுபவத்தில் என் கண்கள் கண்டது.

கண்ணெட்டும் தூரமெல்லாம் வெள்ளைப் போர்வை விரித்தாற்போன்ற அற்புத காட்சிக்குள் அங்குமிங்கும் நம் பணித்தளங்கள்! 2020 பிப்ரவரி மாதத்தின் முதல் வாரம் முழுவதும் அம்மலை நாட்டு ஊழிய ஸ்தலங்களில் எங்கள் கால்கள் நடந்தன. ஆரவாரமில்லா அறுவடைகள்; கஷ்டங்களையும் நஷ்டங்களையும் சகித்து, சிலுவையின் மேன்மைக்காகவே இயங்கும் திருப்பணிவிடையாளர்கள்! 2019 ஆகஸ்ட் 18 அன்று நிலச்சரிவில் சிக்கி, அம்மலையில் கோதுமை மணியாக மறைந்த தன்வாரி தள ஊழியர் சுனில்குமாரின் மனைவி திருமதி. குடியா குமார் மற்றும் ஷாலோம் எனும் அவர்களின் 2வயது மகனையும் சந்தித்த பின், ரோரு பிராந்திய ஊழியர்களைக் காண்பதற்கும் கர்த்தர் கிருபை தந்தார்.

**மாநில வரலாறு:**

70 லட்சத்துக்கும் அதிகமான ஜனத்தொகை, 12 மாவட்டங்கள், 172 தாலுகாக்கள் கொண்ட இமாச்சலப் பிரதேசம் மிகப் பெரும் சரித்திரப் பின்னனியம் கொண்டது! சிந்துவெளி நாகரீகம் வளர்ந்த வேளையில், அங்கிருந்த ஜனங்களுக்கு இம்மலை அடிவாரம் மற்றும் மலைப்பகுதி வாழ்வதற்கு உகந்ததாக நற்சூழலில் அமைந்திருந்ததால் இங்கு குடியேறினார்கள். அவர்களைத் தொடர்ந்து, மங்கோலியர்கள், ஆரியர்கள் என பல மக்களினங்களைச் சார்ந்தவர்களும் வசிக்கலாயினர்; அவர்களை ஆட்சிபுரிந்த அரசுகளையும் சரித்திரம் விவரிக்கிறது.

கி.மு. 2ல் மிக பிரபல்யமான 'ஆடம்பராஸ்' எனும் முற்கால மக்கள் இனம், பத்தான்கோட்டில் இருந்து 'ஜுவாலா முகி' வரை தனி மாநிலமாக ஆட்சிபுரிந்தது. ராவி, பியாஸ், சட்லெஜ் ஆகிய ஆறுகளின் படுகையில் 'ட்ரைகர்டா' மாநிலமும், அதன் பின் குலுட்டா, குலின்தஸ் ஆட்சிகளும், குப்தா,ஹர்சா, ராஜபுத்திரர், முகலாயர், குர்கா அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சி என்றும், அதன் பின் சுதந்திர இந்தியாவில் இமாச்சலப் பிரதேசம், யூனியன் பிரதேசமாக 1.11.1956ல் பிரகடனப்படுத்தப்பட்டது; 25.01.1971ல் இந்தியாவின் 18வது மாநிலமாக உருவெடுத்தது!

ஆங்கிலேயர் ஆட்சியின்போது சிம்லா அவர்களது கோடை கால தலைநகராக 75 ஆண்டுகள் விளங்கியது; அக்காலத்தில் கலை திறனுடன் கட்டப்பட்ட தேவாலயங்கள், கட்டடக் கலையின் சிறப்பை இன்றும் நிரூபிக்கின்றன. வட இந்தியாவில் கட்டப்பட்ட 2வது பழமையான கிறிஸ்தவ பேராலயம் சிம்லாவில் உயர்ந்து நிற்கும் 'கிறிஸ்துநாதர் ஆலயம்'; இன்னும் அநேக ஆலயக் கட்டடங்கள் சுற்றுலாப் பயணிகள் பார்த்துச்செல்லும் சிறப்புமிக்க இடங்களாக உள்ளன.

## ஊழிய வரலாறு:

பழமைவாய்ந்த, வரலாற்றுச் சிறப்புபெற்ற இமாச்சலப் பிரதேசத்தில் விஷ்வவாணி பணி 20 ஆண்டுகளுக்குமுன் மாண்டி மாவட்டம் சுந்தர்நகரில் துவங்கியது. நம் முதல் இமாச்சல ஊழியர் அனிந்த் குமார் பணியமர்த்தப்பட்ட இவ்விடத்தில் சுரேந்தர் என்பவரை முதல் விசுவாசியாக – முதற்கனியாகப் பெற்றோம். பக்தி நிறைந்த இவரது உள்ளம் மெய்த்தெய்வத்தைத் தேடியபோது, தேவ அன்பு சுவிசேஷம் வாயிலாகச் சந்தித்தது; மனம் மறுரூபமானது; வசனம் அடுத்து அடுத்து கிராமங்களுக்குள் ஊடுருவியது; பணி வளர்ந்தது; கூடவே எதிர்ப்புகளும் குறுக்கிட்டது! ஆயினும் 2005ல் 5 புதிய ஊழியர்கள் இம்மலை நாட்டில் தளங்கள் திறந்தனர்; 2011ல் மேலும் 5 ஊழியர்கள், 2015, 2017ல் 17 ஊழியர்கள் என்று பணி எல்கை கர்த்தரால் விரிவடைந்தது. இன்றும் பயிற்சிக்காக 25 இளைஞர்கள் காத்திருக்கிறார்கள்.



மாநிலப் பொறுப்பாளராகப் பணிபுரியும் சகோ. பல்வீந்தர் சிங் என்பாரை தேவன் வல்லமையாகப் பயன்படுத்துகிறார். இன்று சிர்மோர், சிம்லா, மாண்டி, காங்ரா, சம்பா ஆகிய 5 மாவட்டங்களில் 179 தேவைநிறைந்த கிராமங்களில் 29 ஊழியர் குடும்பங்கள் உண்டு; அவர்கள் மூலம் கர்த்தர் தந்த புதிய ஆத்துமாக்கள் 89 இடங்களில் வாரந்தோறும் கூடி தேவனைத் தொழுதுகொள்ளுவதும் உண்டு; கால சூழ்நிலை, ஊழியரின் மலைப் பயணத்துக்கேற்ப வார நாட்களிலும் ஆராதனை தொடருதல் உண்டு. விஷ்வவாணியின் தளங்கள் அமைந்த 22 மாநிலங்களுள் இமாச்சலப் பிரதேசத்திற்குத் தேவனளித்த தனிப்பெரும் ஆசீர்வாதம், 'விசுவாச அறிக்கை ஆராதனைகள்' அதிகமாய் இடம்பெறும் மாநிலம் என்பதாகும்.

பரோட், கெத்தா, ஜகோதி, கத்வால் ஆகிய 4 பணித்தளங்களில் ஆலயங்கள் கட்டியுள்ளோம்; இன்னும் 5 தளங்களில் இவ்வாண்டுக்குள் ஆலயங்கள் கட்ட வாஞ்சிக்கிறோம். ஆம், விசுவாசிகள் பெருகி நிற்கும் இத்தளங்கள் பரிசுத்த ஆவியானவரின் அற்புத அடையாளங்கள் அநுதினமும் இடம்பெறும் பகுதிகள்!

## பணியின் சில கனிகள்:

அந்தஸ்து, அரசியல் செல்வாக்கு, பேர் புகழ் அனைத்தும் பெற்றவர் ஜெய்வந்த் சிங்! எல்லாம் இருந்தும் அவர் அதிகமாய் நேசித்த தன் மகன் நோய்வாய்ப்பட்டு, நடை வரவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு அவருக்குள்! செயலற்றுப்போன கால்களைச் சீராக்க புனித ஸ்தலங்கள், மருத்துவமனை என அலைந்த அவரை மேலும் மேலும் ஏமாற்றங்களையே சந்தித்தபோதுதான் ஊழியரைச் சந்தித்தார்; தேவ கரம் பிள்ளையைத் தூக்கி நிறுத்திற்று! ஆம், ஜெய்வந்த் சிங் வீட்டாரனைவரும் இன்று இயேசுவுக்குச் சாட்சிகள்!

பரோட் கிராமத்தில் 20 வருடங்களாக மனநோயில் பீடிக்கப்பட்டிருந்த சுஜீத் கௌர் என்ற சகோதரியைச் சுகப்படுத்த அவளது கணவர் அனைத்து முயற்சிகளையும் செய்து பலன்காணாதபோது, ஊழியரின் சந்திப்பும் இயேசுவின் நாமத்தில் ஜெபமும் சுகம்தந்தது; கர்த்தர் செய்தருளிய நன்மைக்குத் துதிசெலுத்த பரோட் ஆராதனையில் முழு குடும்பமாய்ப் பங்கேற்கின்றனர் சுஜீத் வீட்டார்.

அசுத்த ஆவிகள், பாவ சாபங்கள், மரணத்தை வருவிக்கும் வியாதிகள் என்று

பொல்லாங்கனின் பிடிகளுக்குள் முடங்கிப் போனவர்களுக்குச் சுவிசேஷமாகிய நம்பிக்கையின் செய்தி மறுவாழ்வு அளிக்கின்றது; மறுபடியும் பிறக்கும் சந்தர்ப்பம் கொடுக்கின்றது; இரட்சிப்பினால் அலங்கரிக்கப்படும் அவர்களது குடும்பங்களில் களிகூருதல், கெம்பீர தொனிகள், துதி கீதங்கள், மகிழ்ச்சியின் ஆரவாரங்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டாகுகிறது; ஆனந்த ஆராதனை அவர்களுடையது!

## உங்களுக்கு ஓர் அன்பின் வேண்டுகோள்:

இமாச்சலப் பிரதேசத்தின் ஊழியப் பகிர்வுகளை வாசிக்கும் கர்த்தரின் பிள்ளைகளே, என் அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே, உங்களுக்கு ஓர் பணிவன்பான வேண்டுகோள். அது படர்ந்து வளரும் பரோட் பணித்தளத்தின் ஊழியத் தேவையைக் குறித்த ஓர் வேண்டுகோள்! நாளொரு மேனியாய் வளரும் இத்தளத் திருச்சபைக்கு இயன்றமட்டும் நம் கரங்களைக் கொடுக்க நம் நெஞ்சம் நோக்கி வரும் வேண்டுகோள்! வளர்ச்சியின் பாதையில் முன்செல்லும் பரோட் சபை, முன்வரும் நாட்களில் சுற்றுவட்டார கிராமங்களுக்கு ஓர் சேவை நிலையமாகத் திகழவும், கலங்கரை விளக்காக நின்று அநேகரது ஆவி, ஆத்துமா, சரீரப் பிரகாரமான தேவைகளைச் சந்திக்கும் அன்பின் நிலையமாக உருவாகவும் பிரகாசமான வாய்ப்புகள் நிரம்பி நிற்கின்றது.

அந்த சிறந்த வாய்ப்புகளைச் செயல்படுத்தும் வகையில், ஆலயத்திற்கு அடுத்தாற்போல் 53 மர்லா அளவுடைய நிலம் ஒன்றும் கிரயத்திற்கு வந்துள்ளது. ஒரு மர்லா, அதாவது 220 சதுர அடி நிலத்துக்கான தொகை ரூ. 20,000/- வீதம் 53 மர்லாவுக்கு மொத்தம் ரூ. 10,60,000/- தேவை. ஆலய அமைவிடத்தை தொடர்ந்து, ஜனங்களின் போக்குவரத்தும் அதிகரித்துவிட்டதால், அந்நிலத்தை வாங்கி, வேறு வகைக்குப் பயன்படுத்துவதற்கும் ஆட்கள் தயாராகி வருகின்றனர். ஆலயத்துக்கு அடுத்த அந்நிலம் ஊழியத்துக்காக உயர்ந்தளவில் உபயோகிக்கப்பட வேண்டுமென்பதே நமது வாஞ்சை ஆகையால், தயவுகூர்ந்து உங்கள் உதாரத்துவமான ஈகையினால் இந்நிலத்தை வாங்குவதற்கு உதவிபுரியுங்கள். குறைந்தது ஒரு மர்லாவுக்கான ரூ. 20 ஆயிரம் கொடுக்க ஜெபத்துடன் முன்வாருங்கள்; அவ்விதம் 53 விசுவாசக் குடும்பங்கள் முன்வந்தால், இந்த அவசரத் தேவை உடனடியாகச் சந்திக்கப்படும்; பரோட் திருச்சபையின் ஊழியங்கள் கிளைகள் விட்டு, அம்மலைப் பிரதேசமெங்கிலும் ஓங்கி வளரும்; உங்கள் சந்ததிக்கு அதன் உன்னத பலன் உரித்தாகும். 2000 கிராமங்களில் சுவிசேஷ தீபம் என்ற இமாச்சலப் பிரதேசத்தின் தரிசன எட்டுகளுக்கு இவ்வித ஊழியக் கட்டமைப்புகள் வேகங்கொடுக்குமென்பதால் தயவாய் இத்தேவையைச் சந்திக்க முன்வாருங்கள்.

**ஆன்லைனில் ஈகை அனுப்ப வங்கி விபரங்கள்**

Bank : State Bank of India
A/C Name : VISHWA VANI
A/C No. : 10151750252
IFS Code : SBIN0003273
Branch : Amanjikarai, Chennai - India.

இரசீது அனுப்புவதற்கு உதவியாக உங்கள் முகவரியைத் தெரிவியுங்கள்:
✆ 9444455646. Email: vishwavaninet@vishwavani.org

கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக.

ஹைதராபாத்
05.03.2020

அன்பரின் பணியில்,
P. செல்வராஜ்

# கோதுமை மணிகளின் வரிசையில்

# பிஸ்வஜித் சாமுவேல்

பிறப்பு : 01.08.1967

மகிமை பிரவேசம் : 14.02.2020



விஷ்வவாணியின் வங்காளப் பாடல்களுக்குக் கடந்த 25 வருடங்களாகக் குரல் கொடுத்தவரும், பணித்தளங்கள் மற்றும் விரிவாக்கப்பணி ஒருங்கிணைப்பாளராகத் திறம்படச் செயலாற்றியவரும், தேவ அன்பின் பிரஸ்தாபம் ஒன்றையே வாழ்வில் பிரதான நோக்கமாகக் கொண்டவருமான அன்பு சகோதரர் பிஸ்வஜித் சாமுவேல் ஓர் துடிப்புள்ள தேவ ஊழியர். ரஞ்சித் சாமுவேல் – சுனிதி சாமுவேல் தம்பதியரின் 2வது மகனாக மேற்கு வங்காளம் – புருலியாவில் பிறந்த இவர், இயேசுவுக்குள் மறுபிறப்பின் அனுபவம் பெறுவதற்கு அன்றைய விஷ்வவாணி ஊழியர்கள் சகோ. டெப்தாஸ் தாஸ், ஹரிகுந்து, ஜெகத் ஜோதி மண்டல் பேருதவிபுரிந்தனர். தன் தகப்பனார் செய்த ரயில்வே துறையின் வாரிசு வேலை வந்தது; இயேசுவின் ஊழிய அழைப்பும் கூடவே வந்தது. தன் 26ம் வயதில் தேவ அழைப்புக்குச் சிரம் தாழ்த்தி ஊழியப் பாதையைத் தெரிந்தெடுத்தார் பிஸ்வஜித். தேவன் தந்த தாலந்துகள், கிருபை வரங்களை – தன் இனிய குரல் வளையத்தை இயேசுவுக்காக உயர்ந்தளவில் உபயோகித்தார்.

01.12.1993 அன்று கொல்கத்தாவில் ஊழியப் பயிற்சியில் சேர்ந்து, 01.06.1994ல் மேற்கு வங்காள முழுநேர ஊழியர்களின் வரிசையில் இணைந்தார். கிராம ஊழியங்களைக் குறித்த பாரமும், ஊழியர்களைக் குறித்த கரிசனையும், இவரது இரத்தத்தில் கலந்திருந்த தரிசனமும் தள ஒருங்கிணைப்பாளராக இயங்க வைத்தது. 05.02.1997 அன்று சிரபோனியை வாழ்க்கைத் துணையாகவும், 15.11.1997 அன்று மௌமிதாவை ஏக மகளாகவும் தேவன் அருளினார்.

2000ம் வருடத்தில் மித்னாபூர் பிராந்திய விரிவாக்கப்பணியின் தேவைகள் அழைத்தபோது, சற்றும் மறுக்காமல் அவ்வட்டார ஊழிய வளர்ச்சி – சபைகளின் மறுமலர்ச்சி – விசுவாசக் குடும்பங்களின் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்காக ஆறு ஆண்டுகள் அயராது உழைத்தார். அவரது தாழ்மையின் உள்ளம், அர்ப்பணத்தின் ஊழியம் 2007ம் ஆண்டில் மேற்கு வங்காளத்தின் விரிவாக்கப்பணி ஒருங்கிணைப்பாளராக உயர்த்தியது; கொல்கத்தாவை பணி மையமாக வைத்து, கண்ணீருடன் களங்களில் விதைப்பவர்களுக்குக் கரங் கொடுக்கும் பொறுப்பில் தேவ ஒத்தாசை பெற்று, மிகத் தீவிரமாகச் செயலாற்றினார். அவரது அன்பின் சேவையில் மேற்கு வங்காள ஊழியர் குடும்பங்கள் கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டன. தன் பாடல் தாலந்துக்கேற்ற மேடைகள் பல ஏறினாலும் சிரம் தாழ்த்தி இயேசுவையே உயர்த்துவார்; பணிந்து நின்று, சிலுவையடிவாரத்தையே நினைப்பூட்டுவார்.

2020 பிப்ரவரி மாதத் துவக்கத்தில் காய்ச்சல், இருமல், மூச்சிழுப்பு என்று ஒன்றன் பின் ஒன்றாக வந்த அறிகுறிகள், இறுதியில் நுரையீரல் பெரிதளவில் பாதிக்கப்பட்டதை உறுதிசெய்தது. மருத்துவமனையில் அருகில் நின்றவர்களுக்கும், தூர இடங்களிலிருந்து தொடர்புகொண்ட ஊழியர்களுக்கும் நம்பிக்கையின் வார்த்தைகளையே பகிர்ந்துகொண்ட பிஸ்வஜித், 14.02.2020 அன்று, தன் 52ம் வயதில், தான் மிகவும் நேசித்த இயேசுவின் சமுகம் சேர்ந்துவிட்டார்.

கணவரை இழந்த நிலையிலும் கர்த்தரின் ஊழியத்தை இழக்காத திருமதி. சிரபோனி, 'அப்பா இயேசப்பாவுடன் இருக்கிறார்கள்' என்று கண்களை துடைக்கும் மகள் மௌமிதா, மற்றும் மேற்கு வங்காள ஊழியர்களுக்கும், ஊழியர் பிஸ்வஜித்துடன் பிறந்த சகோதர, சகோதரிகளுக்கும் தேவ ஆறுதல் உண்டாக தயவாய் ஜெபியுங்கள்.

சின்னச்சின்ன உணர்வுகள்...

# முள்ளில் உதைக்கும் நேரங்கள்!

எதற்காக நமது உள்ளுணர்வில் கோபம் பீறிட்டு வருகிறதோ அதை சீர் செய்வதே நம் அழைப்பு. எல்லோருக்கும் எல்லாவற்றின் மேலும் கோபம் பீறிடுவதில்லை! நம் அழைப்பு கண்ணெதிரிலேயே சிதைக்கப்படும் போது, இப்படி நடக்கிறதே என நம் உள்ளம் குமுறிவிடுகிறது!

உடைந்து நொறுங்கிய சாலைகளில் எந்த உள்ளுணர்வும் அழுத்தா வண்ணம் அமைதியாக பயணம் செய்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான வழிப்போக்கர்களுக்கு மத்தியில் ஒருவனுக்கு மட்டும் உறுத்துகிறது என்றால் அதை சரிசெய்ய அரசாங்கத்தை தூண்டும் பொறுப்பு அவனுக்கான அழைப்பு!

பொது நிறுவனங்களில் – அலுவலகங்களில் கண்ணெதிரில் லஞ்சம் பரிமாறப்படும் போது நான் கொடுக்கவே மாட்டேன் அல்லது வாங்கவே மாட்டேன் என்று அடம்பிடிக்கும் மனிதர்கள்தான் அந்த அழுக்கைத் துடைத்தெரிவதற்கான அழைப்பை பெற்றவர்கள்!

ஒருவருடைய பணியில் நேர்த்தியும் அழகும் இல்லாததை கண்டுபிடிக்கும் ஒரு நிறுவனத்தின் கண்காணி, பணியாளர் மீது கோபப்படுவது அப்பணியை மேம்படுத்துவதில் அவருக்கான அழைப்பு இதயத்தின் அடித்தட்டில் உறைந்து கிடப்பதையே காட்டுகிறது.

மாணவர்கள் கொஞ்சம் கூட பொறுப்புணர்வு இல்லாமல் தங்கள் நேரங்களை வீணடிக்கும் போது எரிச்சலடையும் ஆசிரியர்கள்தான், அம்மாணவர்கள் மீது எத்தனை அன்பும் அவர்களை சீர்ப்படுத்தும் அழைப்பும் பெற்றிருக்கிறார்கள் என்பதை காட்டிக் கொடுத்துவிடுகிறது.

ஆக, அழைப்பு ஒரு பக்கத்தில் வேகத்தையும் இன்னொரு பக்கத்தில் கோபத்தையும் உள்ளடக்கியது. அந்தக் கோபம் சரியான முறையில் பாய்ச்சப்படும் போது மட்டுமே அது வயல்களில் பரவி விளைச்சலை கொடுக்கும். இல்லை என்றால் பெரும் அழிவையும், சாபத்தையும், கண்ணீரையும் கொண்டு வந்துவிடும். துவக்கத்தில் கோபம் கோபமாகவே இருந்தாலும் காலங்கள் அதை பண்படுத்தும் போது அது பாரமாக மாறிவிடுகிறது.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக ஒரு இளைஞனுக்கு இந்தக் கோபம் பற்றி எரிந்தது. மார்க்கத்தை குறித்த கோபம்.

அப்போதுதான் புதிதாக பரவியிருந்த ஒரு புதிய மார்க்கத்தை தன்னுடைய மதத்தை பின்பற்றிய பலர் அலைக்கழிப்பதாக அவன் கருதினான். யாவே என்னும் ஒப்பற்ற கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் அழைப்பு பெற்ற இனம் இப்புதிய மார்க்கத்தில் இணைந்து தங்கள் அழைப்பையும் தங்கள் தெரிந்துகொள்ளுதலையும் தவறாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற வெறி அவனுக்குள் நாள்தோறும் ஏறிக்கொண்டிருந்தது.

கோபத்தை வெறியாக்கி, வெறியை வேகமாக்கி, அந்த வேகத்தோடு அவன் மிக விவேகமாகவும் செயல்பட வேண்டும் என்பதற்காக ஆசாரியரிடம் அனுமதி கடிதங்களையும் வாங்கிக்கொண்டு பொங்கி எழுந்தான்.

கடவுளுடையவர்களைக் களைகளாகக் கருதி, "களைகளே, உங்களை பொசுக்கி

விடும் தீயாக வந்து கொண்டிருக்கிறேன்” என அவன் உள்ளம் அவனுக்குள் வெறித்தனமாகப் பாடிக்கொண்டிருந்தது. அந்த கோபத்தையும் அந்த வேகத்தையும் கடவுள் முள்ளில் உதைப்பதுடன் ஒப்பிட்டார்.

யூத மார்க்கத்தில் செம்மையான யூதனாக இருப்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் விட அதிகமான தகுதிகள் அவனுக்கு இருந்தது. மிகவும் துப்புரவாக மார்க்க ஒழுங்குகளில் வளர்க்கப்பட்டு, அதோடு கூட ஒரு யூத ரபியாகும் முறையான படிப்பை அந்த காலத்தில் அந்தப் பகுதியின் பெரும் ஞானி கமாலியேல் பாதத்தில் கற்று, மொழியறிவு, மார்க்க அறிவு, என எல்லாவற்றிலும் தன்னை தயார்படுத்திக் கொண்ட ஒருவனுக்கு தன் கண்முன்னே தன்னுடைய மார்க்கம் அழிவதை பொறுத்துக் கொண்டு எப்படி இருக்க முடியும்?

அதனால்தான் பொங்கியெழுந்து புறப்படுகிறான் களைகளாகக் கருதியவர்களை அழித்தொழிப்பதற்காக! வேகத்தின் உச்சமாக அப்பொழுதுதான் ஒரு இளைஞனின் கொலையில் இருந்து அவனது மார்க்க வெறி துவங்கியிருந்தது. ஒருவனை வெற்றிகரமாக கொன்றாகி விட்டது, இனி ஒவ்வொரு வீடு வீடாக சென்று கருவறுத்து விட வேண்டும் என்கின்ற எண்ணம் விஷமாக அவனுக்குள் வளர்ந்து கொண்டிருந்தது.

கர்த்தரை நேசிக்கிறவர்கள் துன்புறுத்தப்படும் போதெல்லாம் கர்த்தரும் துன்புறுத்தப்படுகிறார். அவர்கள் அவருடைய கண்ணின் மணி ஆதலால் விசுவாச குடும்பங்கள் துன்புறுத்தப்படும் போதெல்லாம் அவருடைய கண்கள் கலங்கிவிடுகிறது!

காலையில் கண்ணில் தூசி விழுந்தால் மாலையில் கண்களைக் கழுவிக் கொள்ளலாம் என்று எவரும் இருப்பதே இல்லை. மறு நிமிடமே கண்களைக் கழுவுகிறோம். கடவுளின் கண்மணியை சீண்டிப் பார்க்கிற அவர்களை அவர் எப்படி அனுமதித்துக் கொண்டே இருக்க முடியும்?

நேரடியாக இறங்கி வருகிறார்: “முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்” என்றார்.

இஸ்ரேலின் இறுகிய வயல் நிலங்களை உழுவதற்குப் பயன்படுத்தப்படும் காளைகள் மற்றும் கழுதைகள், சில சமயங்களில் குதிரைகள், உழுவதற்குத் திமிரும் போது அல்லது மறுக்கும்போது தார்க்கோலால் அவற்றின் கால்கள் குத்தப்படும். இஸ்ரேலிய தார்க்கோல்கள் 8 அடி நீளம் வரைக்கும் கூட இருக்கும். தடியானதும் உறுதியானதும் ஒரு புறம் சிறிய ஆணி பதிக்கப்பட்டதாகவும் இருக்கும். உழவு நடந்துகொண்டிருக்கும்போது இறுகிய சகதிகள் விலங்கின் கால் பகுதியில் பெரும் பாளமாக ஒட்டிக்கொண்டு அவற்றின் நடையை தடுக்கும் போது இந்த கோல்களின் பின்பகுதியினால் அந்த பெரும் களிமண் பாளத்தை அகற்றி விடுவார்கள். உழவுக்கு திமிரும் விலங்குகள் தார் கோல்களை எட்டி உதைக்கும் அப்போது அவைகளின் சதை காயப்பட்டு உதிரம் ஒழுகும்! இதைத்தான் கடவுள் சொல்லுகிறார் முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம். அதற்கு அர்த்தமென்ன?

இஸ்ரேலில் இருந்து இத்தாலி வரை நீ உழ வேண்டிய வயல்கள் வறண்டு கிடக்கிறது மகனே! உன் கோபத்தையும் ஆதங்கத்தையும் சரியான வழியில் செலுத்தும் போது நீ மாபெரும் மனிதனாக மாறி விட முடியும், ஒரு சமுதாயமே மாறுவதற்கு நீ ஒரு காரணியாக இருந்து விட முடியும். ஆனால் மனிதர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இறங்கி விட்டால் அது உனக்குத் தானே காயம் உண்டாக்கும், உன்னைத்தானே அது அழித்தொழிக்கும் என்கிறார்!

கடவுளின் அழைப்பு தந்த வேகத்தை எட்டி உதைத்துவிட்டு பிழைப்பிற்காக வேற்று நிலங்களில் உழுது கொண்டிருக்கும் நம் தனிப்பட்ட வாழ்வின் இழந்துபோன

வருடங்கள் மீட்க முடியாத மௌனங்களாக ஒருபுறம் சிதறிக் கிடக்க, முள்ளில் உதைக்கும் சம்பவங்கள் தேசங்களிலும் உலகமெங்கிலும் தொடர்கதையாகவே நடந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. இயேசு சொன்னது போல் இவை எல்லாம் சம்பவிக்க வேண்டியதே!

ஆனால் உதைக்கின்ற நபர்கள் அதை உணர்ந்து கொள்ளும் தருணங்களை கடவுள் அவர்கள் வாழ்வில்கொண்டு வரவேண்டும் என்பதாகத்தான் நம்முடைய ஜெபங்கள் இருக்க வேண்டும்.

அந்த ஜெபங்கள் அதிகமாக அதிகமாக, “ஆண்டவரே நீர் யார்?”, “நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?” என்ற கேள்விகள் தேசத்தில் தொனிக்க ஆரம்பிக்கும்! அப்பொழுதுதான் நம்பிக்கையின் வானவில் பளிச்சென்று தெரியும்! அதன் அழகில் சிலிர்த்து இந்த தேசத்தின் குடிகள் ஒருமித்து சொல்லுவார்கள் அல்லேலுயா என்று!

–ஹாரிஸ் பிரேம், விஷ்வவாணி மீடியா

# மலைகளின் மேல் சுவிசேஷகனுடைய பாதங்கள்




நெல்லையிலிருந்து நானும் சகோதரர் லாசர் அவர்களும் பிப்ரவரி மாதம் 15ம் தேதி மாலை ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம், வீரகட்டம் தாலுகாவின் அச்சப்புவலசாவில் அமைந்துள்ள பயிற்சி மையம் போய்ச் சேர்ந்தோம். அந்த வளாகமே விஷ்வவாணி ஊழியத்திற்கு ஒரு சாட்சியாபுரமாகத் தோன்றியது.

அன்றிரவே அருகிலுள்ள சந்திமனுகுடாவில் நடைபெற்று வந்த சோரா மேளாவுக்குச் சென்றோம். ஒரு குக்கிராமத்தில் வயல்வெளியில் மிகப்பெரிய பிரமாண்டமான பந்தலில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஜனங்கள் குழுமியிருந்த காட்சியையும், அவர்கள் ஜெபிப்பதையும், பாடல்கள் பாடும் அழகையும் கண்டதும் ஏசாயா 52:7ல் சொல்லப்பட்ட “சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கிறது” எனற வரிகள் மனத்திரையில் தோன்றி மறைந்தன. செல்வராஜ் அண்ணனின் தேவச்செய்தி அத்தனை உள்ளங்களையும் அசைத்துப்போட்டது. தொடர்ந்து ஜெபவேளையில் ஐந்தைந்து பேராய் இணைந்து ஜெபித்தது பார்க்கும்போது கண்களை நம்பமுடியவில்லை. அதிலும் இளைஞர்கள் அக்கினியாய் நின்றார்கள். அடுத்த நாள் 16ம் தேதி பரிசுத்த நற்கருணை ஆராதனை அவ்வளவு நேர்த்தியாய் பயபக்தியாய் இருந்தது. கடைசிக் கூடுகை எல்லோரும் தங்களை அர்ப்பணிக்கும் வண்ணமாய் அமைந்திருந்தது. அவ்வளவு பெரிய கூடுகை மிக அமைதியாய் நேர்த்தியாய் தேவனுக்கேற்ற பயபக்தியுடன் நடந்தது.

அன்று மாலை பனசமானுகுடா மற்றும் துக்கி என்ற இரண்டு பணித்தள சபைகளைப் பார்வையிட ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. ஆலயங்களை மிகச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். மறுநாள் 70 கி.மீ. தொலைவில் மலையின் மேலுள்ள ஈத்தமானுகுடா என்ற கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட அழகிய ஆலயப் பிரதிஷ்டையில் கலந்துகொள்ள சென்றோம். இங்குள்ள மக்களும் சோரா சமூகத்தினரே. 126 விசுவாசிகளைக் கொண்ட சபை. இதில் 86 பேர் திருமுழுக்கு பெற்றுள்ளார்கள். அந்த ஊருக்கு அரை கி.மீ. தூரத்திற்கு முன்னால் எங்களை வரவேற்று அவ்வூர் விசுவாசிகள் ஆடல் பாடலுடன் எங்களை வழிநடத்தி அழைத்துச் சென்றது மறக்கமுடியாத நிகழ்வு. Rev. ராஜ் அவர்கள் பிரதிஷ்டை ஆராதனையை நடத்தினார்கள். அடியேனுக்கும் செய்திகொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆராதனையில் அந்த மலையின் மற்ற பகுதிகளில் உள்ள தள விசுவாசிகள், தளச்சபை போதகர்கள், ஊழியர் மல்லேஷ் மற்றும் அநேக மிஷனெரிமார் கலந்து சிறப்பித்தார்கள்.

அன்று இரவு அச்சப்புவலசாவில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள 30 சோரா மாணவ மாணவிகள் பாடல்கள் பாடி எங்களை மகிழ்வித்தார்கள்; பரிசுகளும் இனிப்பும் வழங்கினோம். இம்மலைப்பிரதேசத்திலுள்ள சோரா மக்களின் இரட்சிப்பு, சமுதாய மேம்பாட்டுக்காக விஷ்வவாணி ஊழியம் செய்கிற உன்னதமான ஊழியத்தைக் கர்த்தர் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. – T. செல்வின், பெருமாள்புரம்.

# நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன?

(எமில் அண்ணன் எழுதிய இயேசுவின் நாற்பது கேள்விகள் என்ற புத்தகத்திலிருந்தெடுக்கப்பட்டது) **(யோவான் 18:21)**

பிரதான ஆசாரியனிடத்தில் இயேசுவாகிய உத்தம பிரதான ஆசாரியர் கேட்ட கேள்வி, நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியது என்ன என்பதாகும்.

நீர் ஒரு கள்ளனைப் பிடிப்பது போல் என்னைப் பிடிக்க அவசியப்பட்டது என்ன? என்னைப் பிடிக்க ஆலயப் பணத்தில் கைக்கூலி கொடுத்தது என்ன? பகிரங்கமாகப் பணிபுரிந்த என்னை இரகசியமாகப் பிடிக்க வந்தது என்ன? இப்பொழுது என் சீஷர்களைப் பற்றியும், என் உபதேசங்களைப் பற்றியும் நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியது என்ன என்பதே நேர்மைவாதியின் கேள்விக் கணைகளாகும். அம்பு அம்பாக அந்த ஆசாரியனை அந்தக் கேள்விக் கணைகள் குத்திக்கொண்டிருந்தன.

ஆரோனைப் போல் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் ஆசாரியப் பணிக்கு வரமுடியாது. அவனோ ஏரோதினால் சிபாரிசு செய்யப்பட்டு, சனகெரிம் சங்கத்தால் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தான். அது வியாழக்கிழமை பின் இரவு நேரம். அகோர வெள்ளி உதயமாகப் போகும் நேரம். சுமார் 3 வருடமாக உள்ளத்தில் அடைகாக்கப்பட்ட பகை, ஆசாரியர் அகத்தில் இருந்து தீக்குழம்புகள் போல் கொப்பளிக்கும் நேரம்.

கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்துக்கொண்டிருந்த இயேசுவை இருள் கொண்ட இதயங்கள் இரவோடு இரவாகப் பிடித்தன. சனகெரிம் என்ற ஓர் சங்கத்தின் முன் நிறுத்தின. யூத சமயத்தின் காவல் கோபுரமாக அமைந்த இந்தச் சங்கம், சமயக் கோட்பாட்டினை மீறும் எவருக்கும் மரண தண்டனை தவிர மற்ற எந்தத் தண்டனையும் அளிக்கும் அதிகாரம் பெற்றது.

நியாயப்படி, காய்பா என்பவரே பிரதான ஆசாரியர். ஆனால் அன்று இரவு, முதலாவது இயேசுவை விசாரித்தவர் காய்பா அல்ல, அன்னா என்பவர் ஆவார். காய்பாவின் மனைவியின் தகப்பன் அன்னா என்பவர். அவர் கி.மு. 16ம் ஆண்டில் பிரதான ஆசாரியன் பதவியில் இருந்து நீக்கப்பட்டவர். ஆயினும் தான் நீக்கப்பட்டதை ஒப்புக்கொள்ளாமல் நீடித்துக்கொண்டே இருந்தவர். அதற்குக் காரணம் அந்தப் பதவி தந்த செல்வமும் செல்வாக்குமே ஆகும்.

இவ்விதம், அன்னா, காய்பா என்ற இரண்டு பேர் பிரதான ஆசாரியராக இருந்ததைப் பரி. லூக்கா 3:2வது வசனத்தில் பார்க்கலாம். ஆகவே, அன்னா, காய்பா என்ற இருவர் முன்னும் இயேசு மாறி மாறி நிறுத்தப்பட்டார்.

"அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் பேருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி, முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான் (யோவான் 18:12,13).

சனகெரிம் சங்கம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு தனி நபரின் சொத்தாக மாறியது. தட்டிக்கேட்க எவரும் இல்லை. விண் உலக மைந்தன் அவர்கள் முன் நிற்கின்றார். தட்டிக்கேட்க அல்ல, அவர்கள் தத்துவத்தையே உடைக்க, இதோ, சகலத்தையும் புதிதாக்க, புதிய துருத்திகளான விசுவாசிகளின் சபை துவக்க, புதிய ரசமான தன் சொந்த இரத்தம் சிந்த, இதோ அவர்கள் முன் நிற்கின்றார்.

நியாயப்பிரமாணமும் அன்பின் பிரமாணமும் சந்தித்த நேரம் அது. யூத சமயத் தலைவர்களும், யூதா கோத்திரத்துச் சிங்கமும் சந்தித்த நேரம் அது. பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்புகளும் புதிய ஏற்பாட்டின் நிறைவேறுதல்களும் சந்தித்த நேரம் அது. கட்டடமாகிய தேவாலயத்தின் அதிபதிகளும், இருதயமாகிய தேவாலயத்தின் அதிபதியும் சந்தித்த நேரம் அது. அந்தச் சந்திப்பின் உரையாடல் பரி. யோவான் 18:19-21வது வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

வியாழன் நள்ளிரவு நேரத்தில் பிரதான ஆசாரியனுக்குத் தூக்கமே வரவில்லை. இயேசுவை இல்லாமல் செய்யும்வரை அவர்களுக்குத் தூக்கம் வரப்போவதும் இல்லை. எனவே இயேசுவைக் கொலைசெய்ய முடிவுசெய்தனர். சுமார் 3 வருடம் சூழ்ச்சி செய்தனர். வாயின் வார்த்தையினாலே, வாழ்வின் நடத்தையினாலே எந்தக் குற்றமும் அவர்களால் அவரிடம் காண முடியவில்லை.

எனவே, பொய்ச்சாட்சிகளைத் தேடினர். காணிக்கைப் பணத்தை அவர்கள் கையில் திணித்தனர். சொல்லவேண்டியது என்ன என்று சொல்லிக் கொடுத்தனர். அவருக்கு விரோதமாய் பொய்ச்சாட்சி சொன்னார்கள் (மாற்கு 14:58). அப்படிச் சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வாமல் போயிற்று. அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று, இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான். அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாது இருந்தார்.

மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீர் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா என்று கேட்டான். அதற்கு இயேசு: நான் அவர் தான். மனுஷகுமாரன் சர்வ வல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்.

பிரதான ஆசாரியன் இதைக் கேட்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இனி சாட்சிகள் நமக்கு வேண்டியது என்ன? தேவ தூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்கள் எல்லாரும் இவன் மரணத்திற்குப் பாத்திரமாயிருக்கிறான் என்று தீர்மானம்பண்ணினார்கள்.

அன்று அவர்கள் இயேசுவைச் சிலுவையில் கொன்றதினால் உண்மையை உலகத்திற்குள் பறக்கவிட்டார்கள். இரட்சிக்கப்படும் அனுபவத்திற்குள் மனிதரை நடக்கவிட்டார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் உதயமான மக்கள் இயக்கத்தை என்ன செய்வது என அறியாமல் அங்கலாய்த்தார்கள். அப்போஸ்தலர் 4ம் அதிகாரத்திலே "பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும், பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடி, அவர்களை நடுவே நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே, பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக் கேட்டால், உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள் (அப். 4:6-13).

**இன்றும் இயேசுவை ருசித்த உள்ளங்கள்**
**நீதிக்கு நிமிர்ந்து நிற்கும்! உண்மைக்கு அடிபணியும்!**




# டெட்டலஸ்டாய்

லெந்து நாட்களின் இறுதிக்குள் நுழைந்துவிட்டோம்! இந்த நாட்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பினை தியானம் செய்தவர்களுக்கு – அதில் மனம் செலுத்தியவர்களுக்கு வெற்றியின் நாட்களாகவும், சுயவெறுப்பில் மட்டும் தங்களை ஈடுபடுத்தியவர்களுக்கு ஒரு சடங்காச்சாரமுமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிலருக்கு இந்த 40 நாட்களில் மிகவும் முக்கியமான நாட்களாக கடைசி மூன்று நாட்கள் உண்டு! அதிலும், புனித வெள்ளியை துக்க வெள்ளியன்று கருப்பு வஸ்திரங்களுடன் சபை ஆராதனைகளில் பங்கேற்று, ஒன்றரை மணி நேரத்தில் பலமுறை கடிகாரத்தை பார்ப்பவர்களும்கூட, சற்றும் சளைக்காமல் மும்மணிநேரம் அமர்ந்து, கிறிஸ்து நாதர் சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகளை கேட்டு, திருப்தி அடைவதை காண முடியும்! அந்த ஏழு வார்த்தைகளிலும் அநேக சத்தியங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்!

இவ்விதழில் ஆறாம் வார்த்தையாகிய ‘முடிந்தது’ என்று இயேசுநாதர் கூறியதை தியானிப்போம். வேதத்தில் முடிந்தது என்ற வார்த்தை பல முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் கூறுவதெல்லாம் நிர்ணயிக்கப்பட்ட அல்லது தீர்மானித்தபடி பணி நிறைவேற்றப் பட்டுள்ளது அல்லது அவ்வேலை முழுமையாகி விட்டது என்று பொருள்படுகின்றது.

‘‘இப்படியே ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்” (யாத். 39:32). 1 இராஜா. 7:51ல் “சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிந்தது’’ என்று வருகிறது. மேலும் எஸ்றா 6:15ல் ‘ஆலயம் கட்டிமுடிந்தது’ என்று காண்கிறோம். இவையனைத்தும் குறைவின்றி, கொடுத்த திட்டத்தின்படி முடிந்தது என்று பார்க்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, ஊழியம், மரணம், உயிர்த்தெழுதல் அனைத்தும் பிதாவின் அநாதி திட்டமாகவே இருந்தது. மனுக்குலம் பாவத்தினால் பிடிக்கப்பட்ட நாள்முதல் சகல சிருஷ்டியும் அவரது வருகைக்காகவே காத்திருந்தது என்று பரிசுத்த வேதம் தெளிவுபடுத்துகிறது. பிதாவின் ஐக்கியத்திலிருந்து தூரமாய்ச் சென்ற மனுக்குலத்தை தேவனோடு சேர்க்க, முன்னடையாளமாக ஆசரிப்புக்கூடாரம், தேவாலயம், பலிகள், நியாயப்பிரமாணம் என எத்தனையோ தரப்பட்டாலும் கிறிஸ்துவின் பாடு, மரணத்தின் மூலமே அவைகள் அனைத்தும் முழுமைபெறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் மரணமும் சுயநலம் சார்ந்தவை அல்ல, மாறாக, பாவிகளுக்காக– எல்லா மனிதர்களுக்காகவே அமைந்தது!

ஆகவே பிதா எனக்கு கொடுத்த பணியை செய்து நிறைவேற்றி விட்டேன் என்று வெற்றியின் குரலாக ‘முடிந்தது’ என்று இயேசு கூறினார். புதிய ஏற்பாட்டில் Telos என்ற வார்த்தை 28 முறை வருகிறது. இதுவும் முடிந்தது என்று தான் அர்த்தம் கொடுக்கிறது; முடிந்த பணியில் அல்லது வேலையில் மாற்றங்கள் செய்யலாம்; அதில் கூட்டவும் முடியும்! ஆனால் இயேசுநாதர் கூறிய வார்த்தை Telos அல்ல; மாறாக, “டெட்டலஸ்டாய்” (Tetelestai) என்றார்.

மத்தேயு ஹென்றி என்பவர் இதைக் குறித்து இப்படி எழுதுகிறார்: “இவ்வார்த்தையில் தேவன் கிறிஸ்துவில் எதிர்பார்த்த அனைத்தும் நிறைவேற்றப்பட்டு முடிந்தது. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களுக்கு முடிவு, பாரம்பரியப் பலிகளுக்கும் நியாயப் பிரமாணத்திற்கும் முடிவு, பாவ நிவாரணத்திற்கான பலி முடிந்து, மனிதன் நீதிமானாக்கப்பட்டுவிட்டான், இனி மனிதனுக்காக, மனிதனை தேவனுக்கு

முன்பாக நிறுத்துவதற்காக ஒன்றும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை".

"உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ. 2: 13–15).

"நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து" என்று பரிசுத்த பவுல் எழுதும் இந்த வசனத்தின் பின்னணியைப் பார்த்தால், அந்நாட்களில் குற்றவாளிகளின் குற்றங்களுக்கு ஏற்ப அபராதம் செலுத்த வேண்டும்; இன்றும் அந்தச் சட்டம் அமுலில் உண்டு! ஆக, குற்றவாளிகள் அடைக்கப்பட்ட சிறை கதவுகளில் அபராதத் தொகை எழுதப்பட்டிருக்கும்; குற்றவாளி பணமாகவோ அல்லது வேலை செய்தோ அந்த அபராதத்தை செலுத்தி தீர்க்கும்போது, அந்த குறிப்பிட்ட சிறைக்கதவில் Tetelestai (Paid in Full) என்று எழுதி, கைதி விடுதலை செய்யப்படுவார்!

ஆம் பிரியமானவர்களே, நம்முடைய பாவங்கள் எத்தனை திரளானது; அபராதம் கட்டி அவைகள் தீர்க்க முடியாதவைகள்! நம்முடைய கிரியைகளால் நிறைவேற்ற முடியாத அந்த அபராதத்தை இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் செய்துமுடித்தார்! எத்தனை மகிழ்ச்சி! இதயமெல்லாம் பூரிக்கிறதல்லவா?

அப்படியென்றால் என் பாவங்களுக்காக மட்டுமல்ல; நான் வாழும் இந்திய தேசத்தின் அனைத்து மக்களுக்காகவும் என் இயேசு கிறிஸ்து இந்த அபராதத் தொகையை செலுத்தி தீர்த்துவிட்டார் என்ற இந்த அரியதோர் செய்தி அனைத்துச் செவிகளுக்கும் எட்டவேண்டுமே! அறியப்படாத அனைத்துக் கிராமங்களுக்கும் செல்ல வேண்டுமே! துரிதமாகச் செல்ல வேண்டுமே!

ஆகவே தான் வெற்றி சிறந்த ஆண்டவர் தனது கடைசி கட்டளையாக அதை விசுவாசிகள் அனைவருக்கும் தந்திருக்கிறார்: "நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள், சீடர்கள் ஆக்குங்கள்" என்று! இது என்னால் எப்படி ஆகும் என்ற கேள்விகள் நமக்குள் எழலாம். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் ஒரு எடுத்துக்காட்டை நமக்கு முன்வைத்து சென்றிருக்கிறார். 2 தீமோத்தேயு 4:7ல் "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று எழுதினார்.

'ஓட்டம் முடிந்தது'! என்ன ஓட்டம் இது? கர்த்தரின் கட்டளைகளை செய்து நிறைவேற்றி விடுதலே அந்த ஓட்டம்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்காகவும் உங்களுக்காகவும் செய்து முடித்ததை அறிவிக்கும் பணியின் ஓட்டம் அது! அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் இதில் மாபெரும் பங்கு உண்டு!

'Tetelestai' வீழ்ச்சியின் சத்தம் அல்ல; மாறாக, அது மாபெரும் வெற்றியின் சத்தம்! எனக்காக, உங்களுக்காக, உலகத்தார் அனைவருக்காகவும் இயேசு கிறிஸ்து சகலத்தையும் நிறைவாய் நிறைவேற்றி, முடித்துவிட்டார்! ஆதலால் அன்பிற்குரியவர்களே, விரைந்து வாருங்கள், விசுவாசத்தோடு வாருங்கள், காலம் கனிந்துவிட்டதால் அர்ப்பண இதயத்துடன் முன்வாருங்கள்!

விஷ்வவாணி நற்செய்தி பணியோடு இணைந்து அநேகருக்கு இந்த ஜெய வார்த்தையை – கல்வாரி அன்பின் பிரகடனத்தை அறிவிப்போம் வாருங்கள்.

– பொன் சுபர்சன்

# சிலுவை - நம்பிக்கையின் சின்னம்

- அருள்திரு. இம்மானுவேல் ஞானராஜ், இயக்குநர் - ஜெப ஒருங்கிணைப்பு

## நம்பிக்கையின் சின்னம் – பழைய ஏற்பாட்டில்

அன்று பெருவெள்ளம் ஜலப்பிரளயமாக மாற வானத்தின் மதகுகள் திறவுண்டன, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் திறவுண்டது. "நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது. நோவாவின் பேழை தண்ணீரில் மிதக்கத் தொடங்கியது. பேழைக்குள் பிரவேசித்த நோவாவின் குடும்பமும் மேலும் அதில் பிரவேசித்த மிருகஜீவன்களும் பேரழிவுக்குத் தப்பின. தேவ வார்த்தையை நம்பி தேவத் திட்டத்திற்குட்பட்டவர்கள் காக்கப்பட்டார்கள். அவர்களுக்கு பேழை ஓர் நம்பிக்கையின் சின்னமாயிற்று. பிரவேசிக்க விருப்பமில்லாமல் மறுத்த ஜனங்கள் என்ன செய்திருப்பார்கள்? மழை இன்று நிற்கும், நாளை நிற்கும் என்று காத்திருந்திருப்பார்கள், பின் தங்களைக் காத்துக்கொள்ள உயரமான இடங்களில் ஏறியிருந்திருப்பார்கள். பின் தண்ணீரில் மிதக்கவும் மூழ்கவும் ஆரம்பித்திருப்பார்கள். முடிந்தளவு அந்தப் பேழையை நெருங்கிவர, அதில் ஏறிவிட பிரயாசம் எடுத்திருப்பார்கள். அவர்களுக்கும் பேழைதான் ஒரு நம்பிக்கையின் சின்னம். ஆனால் நம்பவேண்டிய நேரத்தில் நம்பவேண்டிய வார்த்தையை நம்பாததினால் அந்த நம்பிக்கையின் சின்னம் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. ஒருவேளை பேழையின் வெளியே தொற்றிக்கொண்டு தப்ப முயற்சித்தவர்களும் நாற்பது நாள் தாக்குப்பிடிக்காமல் மரித்திருப்பார்கள்.

மழை நின்றது, பெருவெள்ளம் வடிய ஆரம்பித்தது. நோவா காகத்தையும் புறாவையும் சிறிய ஜன்னல் வழியாய் வெளியே அனுப்பி எதிர்பார்ப்பது என்ன? அடுத்த நம்பிக்கையின் சின்னமாக புறாவின் வாயில் ஒலிவ மரத்தின் இலை. தொடர்ந்து திரும்பிவராத புறா தெரியப்படுத்தியது என்ன? புறா தங்குவதற்கு மரக்கிளைகள் கிடைத்துவிட்டது. தங்களுக்கும் தரையிறங்கும் நேரம் அடுத்து வந்துவிட்டது என்பதே. அரராத் மலையில் தங்கிவிட்ட பேழையிலிருந்து நோவாவும் குடும்பமும் வெளியே வந்தார்கள்; அற்புதமாக அழிவுக்குக் காக்கப்பட்டார்கள். நோவா செய்ததெல்லாம் தேவ வார்த்தையை நம்பி அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். அதன்பின் அவன் செய்ததெல்லாம் கர்த்தருடைய வேளைக்காகக் காத்திருந்தான். பேழையை விட்டுப் புறப்படுங்கள் என்ற அடுத்த கட்டளை வரை பொறுமையுடன் காத்திருந்தான். அந்தப் பேழை நோவாவின் நம்பிக்கைச் சின்னம். அது மட்டுமல்ல, அடுத்த நம்பிக்கைச் சின்னம் தேவன் நோவாவுடன் செய்த உடன்படிக்கை. அதுதான் வானவில். அதை மாபெரும் நம்பிக்கையின் சின்னமாகத் தேவன் வைத்தார். பூமியை இனி ஜலத்தால் அழிக்கமாட்டேன் என்ற தேவ உடன்படிக்கையே அந்த வானவில் (ஆதி. 9:11–14). வானவில்லைப் பார்க்கும்பொழுதெல்லாம் நம் நினைவிற்கு வருவது தேவன் தண்ணீரினால் உலகத்தை அழிக்கமாட்டார் என்ற நம்பிக்கையின் வார்த்தையே. வானவில் ஒரு நம்பிக்கையின் சின்னம்.

## நம்பிக்கையின் சிகரம் – நம்பிக்கையின் எடுத்துக்காட்டு:

நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்புவதை விட்டுவிடுங்கள், எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம் (ஏசாயா 2:22). வேதப் புத்தகத்தின் மைய வசனமே 'மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்' (சங். 118:8) என்பதே.

வேதத்திலே தேவன்பேரில் அதிக நம்பிக்கை கொண்டிருந்த ஒரு மனிதனைப் பற்றி வாசிக்கிறோம். அவனைக் குறித்து வேதம் கொடுக்கும் சாட்சி 2 ராஜா 18:5ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 'அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை".

அருமையான இந்தச் சாட்சிக்குச் சொந்தக்காரன் எசேக்கியா ராஜா தான். அவனுடைய வாழ்க்கை தேவனை நம்புவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அவனுடைய தகப்பனாகிய ஆகாஸ் ராஜா மிகவும் துன்மார்க்கமாய் வாழ்ந்து, தேவனுடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, தேவனுக்குப் பிரியமில்லாத அருவருப்பான காரியங்களைச் செய்தவன். ஆனால் எசேக்கியா ராஜாவான முதலாம் வருடம் முதலாம் மாதம் முதலாம்

தேதியில்தானே தேவாலய சுத்திகரிப்பைத் தொடங்கி, பல தலைமுறைகளாகக் கைவிடப்பட்டுப்போன பஸ்கா பண்டிகையைத் திரும்பத் தொடங்கி கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்யத் தன் மனம் பதித்தவன். ஆனால் அவன் காலத்தில் அசீரியா ராஜா சனகெரிப் எசேக்கியா ராஜாவையும் மக்களையும் அச்சுறுத்தத் தன் தளபதி ரப்சாக்கேயை அனுப்புகிறான். அவன் பேசும் வார்த்தைகள் 2 ராஜா. 18:17–37 வரை குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள்; அவன் உங்களைக் கர்த்தரை நம்பப்பண்ணுவான் என்று எச்சரிப்பதை 29,30 வசனங்களில் பார்க்கிறோம். ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ என்று எள்ளி நகையாடுவதை 34ம் வசனம் கூறுகிறது. மீண்டும் எசேக்கியா ராஜாவினிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பு, 'நீ நம்புகிற தேவன் உன்னை ஏமாற்ற விடாதே' என்று கூறுவதை 2ராஜா. 19:10ல் காண்கிறோம். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் எசேக்கியா ராஜா தன் முழு இருதயத்தோடு கர்த்தரை நம்பினான். அவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது என்றும் ((2 நாளா. 16:9), "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் என்றும் (ஏசாயா 26:3) வாசிக்கிறோம். எசேக்கியா தனக்கு வந்த பயமுறுத்துதலை யெல்லாம் தேவ சமுகத்தில் ஜெபமாக ஏறெடுப்பதை ஏசாயா 37:14–20ல் வாசிக்கிறோம். நடந்தது என்ன? தேவன் தமது தூதர்களை அனுப்பி அசீரியரின் பாளையத்தில் இலட்சத்து எண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தார் என்று 2 ராஜா. 19:35 தெளிவாகக் கூறுகிறது. கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். அவனை அழிக்க நினைக்கிறவனோ அழிவான். அந்த அசீரிய ராஜா சனகெரிப் அவன் குமாரராலே அவனது தேவனுடைய ஆலயத்தில் பட்டயத்தால் வெட்டிக்கொல்லப்பட்டான் என்று 2 ராஜா 19ம் அதிகாரம் முடிகிறது. எசேக்கியா ராஜாவைப்போல நம் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனைச் சார்ந்துகொள்வோமா?

### நம்பிக்கையின் சின்னம் – புதிய ஏற்பாட்டில்:

அன்று நோவா காலத்துப் பேரழிவிற்குத் தப்பிக்கொள்ள பேழை கொடுக்கப்பட்டது. இன்று வரப்போகும் பேரழிவிற்குத் தப்பிக்கொள்ள – வரவிருக்கும் நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ள தேவன் மனிதனுக்குக் கொடுத்துள்ள பேழை – கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சபை ஆகும். 1 பேதுரு 3:18–21 பகுதியிலே பேழைக்கு ஒப்பாக ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுகிறார். திருமுழுக்கின் மூலம் ஒருவன் திருச்சபையின் அங்கமாகிறார். அதாவது புதிய ஏற்பாட்டின் பேழைக்குள் வந்துவிடுகிறான். அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் (யோவான் 5:24). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சபை நோவாவின் பேழை என்று ஒப்பிடும்போது அதன் நுழைவாயிலில் கொடுக்கப்படும் அடையாளம் சிலுவை அடையாளமே. பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படி திருமுழுக்குக் கொடுக்கப்படுகிறது. அது கர்த்தராகிய இயேசுவின் சிலுவை மரணமாக, அடக்கம்பண்ணப்படுதலை, மகிமையான உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. அதுதான் சிலுவை அடையாளம். சிலுவை எந்த ஒரு மனிதனுக்கும் – தன்னை பாவியிலும் பாவி என்று எண்ணுகிற மனிதனுக்கும் நம்பிக்கை தரும் சின்னம். ஏன்? அது ஓர் அன்பின் அடையாளம். நீதிமானுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். ஆனால் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார் என்றும் நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனுடைய மரணத்தால் அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் என்றும் ரோமர் 5:7–10 வசனங்களில் வாசிக்கிறோம். நம்முடைய பாவங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு சிலுவை மரணத்தில் நமக்காக இயேசு இரத்தம் சிந்தி மரித்தாரே, அந்தச் சிலுவை எந்த ஒரு பாவிக்கும் நம்பிக்கையின் சின்னம் அல்லவா!

### பூரண நம்பிக்கையின் சின்னம்: வாக்குத்தத்தம்

எபி. 6:13–20 வசனங்களைப் பாருங்கள். அங்கு தேவன் ஆபிரகாமுக்குப் பண்ணின வாக்குத்தத்தம்

பற்றி ஆக்கியோன் பேசுகிறார். ஆபிரகாமைத் தேவன் ஆசீர்வதித்தார். கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கின்ற நமக்கும் அதைச் செய்ய வல்லவராயிருக்கிறார். 18ம் வசனத்தில் 'நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படி எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். இரண்டு மாறாத விசேஷங்கள் என்ன? ஒன்று வாக்குத்தத்தம், இரண்டாவது ஆணை. ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணி தமதுபேரிலே ஆணையிட்டு உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். ஆணையிடுதல்தான் எல்லா பேச்சு வார்த்தைகளுக்கும் முடிவு. தேவன் அதை ஆபிரகாமின் மூலம் நமக்கும் ஏற்படுத்தினார். அந்த நம்பிக்கை நம்மைப் பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் நமது பிரதான ஆசாரியனாகிய இயேசுவினிடத்தில் கொண்டுசெல்லுகின்றது. அது நமது ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமது நம்பிக்கை நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிற இயேசுவின் மேலும் (1 யோவான்2:1), ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன், நான் மறுபடியும் வந்து உங்களைச் சேர்த்துக்கொள்ளுவேன் என்று கூறிய அவர் வாக்குத்தத்தின் மேலேயுமே (யோவான் 14:2,3) உள்ளது, ஆமென். ■

## தேவ பணியில் தெபோராக்கள்






தளங்களில் வளரும் தேவ ஊழியங்களுக்கும், திருச்சபைக்கடுத்த பணிவிடைகளுக்கும் தெபோராக்களின் பங்களிப்பு வெகு அவசியம் என்பதால் தெபோராள் முகாம்கள் தேவைநிறைந்த தளங்களில் தொடர்ந்தவண்ணம் உள்ளன. பிப்ரவரி 24 முதல் 26 வரையிலான மூன்று நாட்களும் சினகுதமா, பக்குபேட்டா, கொத்தபக்கம் ஆகிய தளங்களில் நடத்தப்பட்ட முகாம்கள் 550 பேருக்குப் பலனளித்தது. திருமதி. ஜாய்ஸ் செல்வராஜ் அக்கா அவர்களைக் கொண்டு கர்த்தர் தமது வார்த்தைகளை அனுப்பினார். லீதியாளின் உள்ளத்தைத் திறந்த தேவாவியானவரின் வல்லமையான இடைபடுதல் மூன்று முகாம்களிலும் இடம்பெற்றது. கிறிஸ்துவுக்காக வாழ்வதுடன், கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷத்திற்காக இயங்க சிரம் தாழ்த்தி அர்ப்பணித்திருக்கும் தெபோராக்களைக் கொண்டு கஜபதிநகரம், பொபிலி பிராந்திய பணித்தளங்களிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் சுவிசேஷ தீபங்கள் மேலோங்கி பிரகாசிப்பதாக. – ஊழியர் யோவான் திருப்பதி ராவ்

## மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் உழைக்கும் ஊழியர் குடும்பங்களுக்கு மிகுந்த ஒத்தாசையாகவும், ஆலயங்கள் – ஊழியங்களுக்கு எப்போதும் முகம் மலர்ந்து நல்ஆதரவு தந்தவர்களுமான அன்பு சகோதரர் P. விஜில்ராஜ் (வயது 42) அவர்கள் 02.03.2020 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். விசுவாசத்திலும் அன்பிலும் ஐக்கியத்திலும் தேவப் பிள்ளைகளைக் கனம்பண்ணுவதிலும் முன்மாதிரியாக வாழ்ந்து, 'என்றும் கர்த்தாவுடன்' வாழும் பாக்கியம்பெற்றார்கள்.

மதுரை வட்டார விஷ்வவாணி பணியில் அவர்களது மனமார்ந்த ஈடுபாட்டை அதிக நன்றியுடன் நினைவுகூருகிறோம். கண்ணீரைத் துடைக்கும் கர்த்தர்தாமே இழப்பில் வாடிநிற்கும் வயோதிப பெற்றோர், அன்புத் துணைவி திருமதி. ஜெனித் விஜில்ராஜ், பிள்ளைகள் ஜெபின்ராஜ், என்சிலேட்டா, உடன் பிறந்தோரின் குடும்பங்களுக்குச் சகல ஆறுதலும் தேறுதலும் தந்தருள ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.



# பணித்தளச் செய்திகள்

## ஸ்தோத்திரமும் வேண்டுதலும்

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்;
அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத்
தேவனுடைய சித்தமாயிருக்கிறது.
சகரியா 4:6



### 1. ஜம்மு காஷ்மீர்

போதை வஸ்துக்களுக்கு அடிமையாயிருந்த வினய் சுவிசேஷத்தினால் புதுவாழ்வு பெற்றார். காந்திகலி கிராமத்தில் கௌசல்யா குடும்பத்தினர் வேத வசனங்களில் சமாதானம் கண்டுள்ளனர். ராய் சம்பா விசுவாசிகள் ஐக்கியத்தில் கர்த்தர் இணைத்த புதிய ஆத்துமாக்களுக்காக ஸ்தோத்திரம். கன்டலா, ஷா பிலோர் ஆகிய இடங்களில் வசனங்கள் செல்லும் வாசல்கள் திறந்துள்ளன, துதியுங்கள்.

பத்தி, பத்வானி ஆகிய தளப்பணிகளில் எதிர்வரும் ஜனங்களுடன் தேவ ஆவியானவர் இடைபட... ரஜோரி, கத்துவா மாவட்டங்களில் ஊழியம் துவங்கும் தேவையைக் காண்கிறோம்... கத்லியில் கர்த்தரின் ஆலயம் அமைவதற்கு உகந்ததோர் இடம் தேவை... சஞ்சாலி மன்டி, சவுக்கி ஆகிய தளச்சபைகளில் பங்கேற்போர் மூலம் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் மேலோங்க ஜெபியுங்கள்.



### 2. இமாச்சலப் பிரதேசம்

ராய்புராவில் கர்த்தர் உருவாக்கிய ஆராதனைக் குழுவுக்காக ஸ்தோத்திரம். அஞ்சலியை அலைக்கழித்த அசுத்த ஆவி இயேசுவின் நாமத்தில் துரத்தப்பட்டது. 32 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர்.

பிருந்தாபன், கந்த்வால் பிராந்தியங்களுக்கு ஊழியர்கள் தேவை... கெத்தாவில் கர்த்தர் தந்த 20 புதிய குடும்பங்களும் கிறிஸ்துவின் வசனங்களில் ஸ்திரப்பட... காங்ரா, சிர்மோர் ஆகிய மாவட்டங்களின் உள்ளான கிராமங்களுக்குச் செல்ல 20 புதிய ஊழியர்கள் ஆயத்தம், அனுப்புவோர் தேவை, ஜெபியுங்கள்.

## 3. பஞ்சாப்



30 கிராமங்கள் முழுநேர ஊழியர்களின் புதிய தளங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 95 பேர் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர். 10 வருடங்களுக்குப் பின் கர்த்தரால் குழந்தை பாக்கியம் பெற்ற காந்தா தேவி குடும்பம் கர்த்தரின் வசனங்களில் திடப்படுகின்றது. பிசாசின் பிடியில் ஆறு ஆண்டுகள் போராடிய சாஹில் இயேசுவின் நாமத்தில் விடுதலை அடைந்தார்.

பிரேம் மசீ, பண்டி ஆகிய புதிய விசுவாசிகள் கூறும் சாட்சிகள் அநேக இருதயங்களை தேவனுக்குள் மறுரூபப்படுத்த... பரியார் பணித்தளத்தில் கர்த்தரின் ஆலயம் கட்டப்பட வேண்டும்... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 25 பேருக்காக ஜெபியுங்கள்.

## 4. உத்தராகாண்ட்



தேடுவோர் கூட்டங்களில் நற்செய்தி கேட்ட 46 பேர் இயேசுவிடம் பாவ அறிக்கை செய்தனர். கிறிஸ்துவில் மறுபடியும் பிறந்த 26 பேர் விசுவாச அறிக்கைசெய்தனர். காடிமா பிராந்தியத்தில் 2 ஆராதனைக் குழுக்கள் புதிதாய் உருவாகியுள்ளன.

ராய்வாலா தளத்தில் தொடரும் உபவாச ஜெபங்களில் அற்புத அடையாளங்களைக் கர்த்தர் செய்தருள... டயாலிஸிஸ் சிகிச்சைக்குட்படும் ஊழியர் பிரதீப் குமாரின் மனைவிக்குத் தேவ தொடுதல் தேவை... ஹரிதுவாரில் இடம்பெறவுள்ள 'தாரு மேளா'வின் ஆயத்தங்களுக்காக... விசுவாசிகள் பெருகும் 5 ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலங்கள் வாங்கப்பட வேண்டும் ஜெபியுங்கள்.

## 5. ஹரியானா



வேத ராம் வீட்டாரின் விசுவாசம் இயேசுவில் ஸ்திரம் கண்டது. மனோலி, பிஸ்வாமில் ஆகிய தளங்களில் புதிய விசுவாசிகள் பெருகக் காண்கிறோம், ஸ்தோத்திரம். பெராகாவில் இருவர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர்.

வாலிபர் கூடுகையில் பங்கேற்ற 42 பேரும் வசனங்களில் வளர... அஸவார்பூரில் ஆராதனைக் குழு உருவாக... சியாம் சுந்தர் என்பாரின் இருதயம் இயேசுவுக்குச் சொந்தமாக... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 40 பேருக்காக ஜெபியுங்கள்.

## 6. டெல்லி



70 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை வாஞ்சையுடன் பெற்றுக்கொண்ட ஜனங்களுக்காக ஸ்தோத்திரம். ரஜினி, சீபா ஆகிய விசுவாசக் குடும்பங்களைக் குழந்தை பாக்கியத்தினால் கர்த்தர் ஆசீர்வதித்தார். காதர் எனுமிடத்தில் இயங்கும் ஆராதனைக் குழுவில் 4 புதிய குடும்பங்கள் பங்கேற்கின்றன. மதன்பூதர் தெபோராள் குழுவில் புதிதாய் இணைந்திருக்கும் 5 சகோதரிகளுக்காக ஸ்தோத்திரம்!

ஜசோலா, சாயீன்பாக் ஆகிய இடங்களில் அன்பும் அமைதியும் சமாதானமும் சுபிட்சமும் மேலோங்க வேண்டும்... தளங்களில் நிறைவடைந்த நற்செய்திக் கூடுகை, இளைஞர் முகாம்களின் பின்தொடர்பணிகளுக்காக... 40 நாட்கள் தொடரும் இல்ல ஜெபக் கூடுகைகள் புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பெலனூட்ட ஜெபியுங்கள்.

## 7. இராஜஸ்தான்



வலிப்பு வியாதியினின்று விடுதலையடைந்த கவிதா, கர்ணாவத் கிராமத்தில் கர்த்தருக்குச் சாட்சி பகருகின்றாள். கனோடா என்பாரின் மந்தமான செவிகள் ஜெபத்தால் திறவுண்டன. 9 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கை செய்தனர். போர்காபார் கிராமத்தின் விசுவாசிகள் ஐக்கியத்தில் ராகேஷ் வீட்டார் புதிதாய் இணைந்துள்ளனர், ஸ்தோத்திரம்.

வாக்டி மேளாவில் பங்கேற்ற1200 விசுவாசிகளையும் கர்த்தர் தமது சுவிசேஷப் பணியில் பயன்படுத்துவாராக. ஜாப்லா, கனேலாபாடா ஆகிய இடங்களில் விதைக்கப்பட்ட தேவ வசனங்கள் கிரியைசெய்ய... புராகுவாவில் கர்த்தர் நம் பணிகளுக்கு அநுகூல வாசலைக் கட்டளையிட ஜெபியுங்கள்.

## 8. உத்தரப்பிரதேசம்



எஸ்றா முகாமில் 14 இளைஞர்களை முழுநேரப் பணிக்கெனத் தேவன் தந்துள்ளார். மதாபாவில் ஆலயம் கட்டுவதற்கு உகந்ததோர் இடம் கண்டோம். தையற்பயிற்சி வகுப்புகளை நிறைவுசெய்த 10 சகோதரிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 56 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர்.

புல்பூர் தளத்தில் காணப்படும் ஊழியத் தடைகள் மத்தியில் விசுவாசிகளைக் கர்த்தர் தற்காக்க... குட்டாஹா கிராமத்தார் வசனங்களில் மனம்பதிக்க... பாரதாரா தளத்தில் கட்டியினால் வேதனையுறும் குடியாவுக்குச் சுகம் கிடைக்க... சீத்தாமதி பிராந்திய ஊழியங்களில் கர்த்தர் கனிதர ஜெபியுங்கள்.

## 9. பீஹார்



மனநோயிலிருந்த கிரண் குமாரி கர்த்தரால் சுகம்பெற்றார். 42 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். சுவிசேஷம் கேட்ட தயா சங்கர் 'இனி மது அருந்துவதில்லை'யெனத் தீர்மானித்துள்ளார். தேகாரா, சத்துவா, தாவா ஆகிய கிராமங்களில் கர்த்தர் தந்த அநுகூல வாசல்களுக்காக ஸ்தோத்திரம்.

5 வருடங்களாகக் குழந்தை பாக்கியத்திற்குக் காத்திருக்கும் ரேணு தேவி குடும்பத்திற்காக... போதை வஸ்துக்களுக்கு அடிமையாயுள்ள ராமானந்த் மீட்கப்பட... ஆலயப் பிரதிஷ்டை ஆராதனைக்கு ஆயத்தமாகும் பாரா கரோனி தளச் சபையாருக்காக ஜெபியுங்கள்.

## 10. ஜார்க்கண்டு



தார்கஷி எனுமிடத்தில் 13 பேர் வசனங்களுக்கு மனோவாஞ்சையுடன் செவிசாய்க்கின்றனர். கெனலோயாவில் கர்த்தரின் ஆலயக் கட்டுமானப்பணி துதியுடன் துவங்கியது. 11 பேர் விசுவாச அறிக்கை செய்து, தேவனை மகிமைப்படுத்தினர். பசேரிபாத் கிராமத்தில் பிச்சுத் பிரிஜியாவின் இல்லம் வேதபாட நிலையமானது, ஸ்தோத்திரம்.

ஹரடோலியில் தொடரும் தேடுவோர் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்கள் பங்கெடுக்க... காக்ரா, பெர்வாரி ஆகிய கிராமங்களில் கர்த்தரின் சபைகள் ஸ்திரப்பட... வலிப்பு வியாதியினால் அடிக்கடி அவதியுறும் அலோக், பிரீத்தம் சுகம் பெற... சிக்ரி, அராங் லோயோ ஊராருக்கு கர்த்தர் தம் சமாதானத்தைக் கட்டளையிட ஜெபியுங்கள்.



## 11. மேற்கு வங்காளம் - டார்ஜிலிங் மாவட்டம்

கியோடாலைன் தளத்தில் திறக்கப்பட்ட புத்தாலயம் அண்டை கிராமங்களின் ஊழியங்களுக்கும் மிகுந்த பலனாயுள்ளது. மனநோயினின்று மறுவாழ்வு பெற்ற ரகுநாத் துடு இயேசுவுக்குச் சாட்சிபகருகின்றார். கோஷ்புகூர் தெபோராள் முகாமில் 100 சகோதரிகள் பங்கேற்று, இயேசுவுக்கு மகிமைசேர்த்தனர். கும்னா பஸ்தி விசுவாசிகள் ஐக்கியத்தில் பாபுல் இத்யார் வீட்டார் புதிதாய் இணைந்துள்ளனர், ஸ்தோத்திரம்.

செப்திகுரியில் கர்த்தரின் சபை உருவாகவேண்டும்.... மதுபானங்களைக் காய்ச்சும் பிபன் நாயக் குடும்பத்தாரின் இரட்சிப்புக்காக... தாயை இழந்து சமாதானத்திற்காக ஏங்கும் சப்நாத், ராகுல் ஆகியோருக்குத் தேவாறுதல் உண்டாக... காசநோயுடன் போராடும் ரமேஷ் ஒராவன் கர்த்தரால் குணமடைய ஜெபியுங்கள்.



## 12. மேற்கு வங்காளம் - எத்தில்பாரி பிராந்தியம்

ரங்காதி, மத்ய செக்கமாரி ஆகிய 2 கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் உருவாகியுள்ளன. 5 பேர் தங்கள் புதிய விசவாசத்தை அறிக்கைசெய்தனர். தேடுவோர் கூட்டங்களின் பயனாக 1056 பேருக்குக் கர்த்தரின் வசனம் அறிவிக்கப்பட்டது. மேற்கு தியோகாவ் தள ஆலயக் கட்டுமானப்பணி தேவத்திட்டப்படி நடந்தேறுகிறது, ஸ்தோத்திரம்!

விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கியுள்ள கிஷோர் முண்டா மீண்டும் இயேசுவைப் பற்றிக்கொள்ள... மூளை கட்டியினால் மிகுந்த பாதிப்படைந்துள்ள அனுவுக்குக் கர்த்தர் மறுவாழ்வுதர... புத்திலி ஒராவன், துகினி ஆகியோரின் குடும்பங்கள் விசுவாசத்தில் பெலப்பட ஜெபியுங்கள்.



## 13. மேற்கு வங்காளம் - கொல்கத்தா பிராந்தியம்

சுவிசேஷம் கேட்ட சுமன் முர்மு போதை வஸ்துக்களுக்கு முற்றுப்புள்ளியிட்டார். விஷப் பாம்புக் கடியிலிருந்து உயிர் பிழைத்த பிரமிளா முர்மு சுவிசேஷத்திற்குச் சாட்சிபகருகின்றார். மித்னாபூர் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களில் வசிக்கும் சந்தாலி ஜனங்கள் நற்செய்திக்கு மனோவாஞ்சையுடன் செவிசாய்க்கின்றனர். ஊழியர் ஜீசு முர்மு மூலம் முலாகத் தளத்தில் 56 பேருக்கு முதன் முறையாய்த் தேவ வசனம் கிட்டியது.

புதிய விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்த 15 பேரும் ஆவிக்குரிய வளர்ச்சியடைய... சந்த்குரியில் இடம்பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்தங்களுக்காக... ஊழியர் பால் முர்மு பணிபுரியும் சந்திப்பூரில் காணப்படும் ஊழியத் தடைகளைத் தேவன் அகற்ற... அடிக்கடி வியாதிக்குள்ளாகும் ஹான்ஸ்புகூர் ஊழியர் சுஜாய்தாஸின் மகன் சமர்ப்பண்தாஸ் இயேசுவால் நற்சுகமடைய ஜெபியுங்கள்.



## 14. சிக்கீம்

5 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர். தொடர் மரணங்களைச் சந்தித்த பீம் பகதூர் ராய் என்பாரின் வீட்டிலுள்ள அந்தகாரக் கிரியைகளைக் கர்த்தர் அகற்றினார். நெடுநாள் வியாதிப் படுக்கையிலிருந்து எழுந்து நடக்கும் பிரதாப் தாமங் மூலம்

இயேசுவின் நாமம் மகிமையடைகின்றது. கோப்சே, துமின் ஆகிய தளங்களின் ஊழியர்களுக்குத் தேவன் தந்த புதிய தொடர்புகளுக்காக ஸ்தோத்திரம்.

செவிகளும், வாயும் அடைபட்ட அயிதா மாயாவுக்கு இயேசுவின் தொடுதல் தேவை... மெல்லி ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... புதிய விசுவாசி சுனிதா சுனாரின் சாட்சி முழுக் குடும்பத்தாரையும் இரட்சிப்புக்குள் நடத்த... ஊழியர் ஓம் பிரகாஷ், சைமன் லெப்சா ஆகியோரின் ஊழிய எல்லையில் மனந்திரும்பும் ஆத்துமாக்கள் பெருக ஜெபியுங்கள்.



## 15. அசாம்

ராஜ்பூர், ஹெமாய்லெதி, பதிர்காவ் ஆகிய இடங்களில் புதிய விசுவாசிகள் ஆராதனைக் குழுக்களை உருவாக்கியுள்ளனர். தேடுவோர் கூட்டங்கள் வாயிலாக 134 கிராமங்களில் கர்த்தரின் வசனங்கள் விநியோகிக்கப்பட்டது. துசுராபாராவில் காணப்பட்ட ஊழியத் தடைகளைத் தேவன் அகற்றினார். 20 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

குலிகாவ், பகர்பூர், நேரு பஜார் ஆகிய இடங்களில் துவங்கிய வேதபாட வகுப்புகளால் சமுதாய முன்னேற்றம் இடம்பெற... கர்த்தருக்குச் சித்தமானால் 60 இளைஞர்களுக்கு முழுநேர ஊழியத்திற்கானப் பயிற்சியைத் துவங்க ஆயத்தமாகுகிறோம். கிட்னி சம்பந்தமான வியாதியுடன் போராடும் ஊழியர் ரேதிப் பேகு இயேசுவால் சர்வாங்க சுகம்பெற ஜெபியுங்கள்.



## 16. திரிபுரா

26 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர்; மேலும் 123 பேர் அவ்வித அனுபவத்திற்கு ஆயத்தமாகுகின்றனர். நந்தா சௌதுரி காமி, சால்தாங்மனுபாரா ஆகிய தளங்களின் தேவாலயப் பிரதிஷ்டை ஆராதனைகள் துதியுடன் நிறைவுற்றது. பத்சராகாமியில் கர்த்தரின் சபை உதயமானது. தேடுவோர் கூட்டங்களில் 135 குடும்பங்கள் இயேசுவில் மறுவாழ்வு பெற்றன, ஸ்தோத்திரம்.

விஷ்வவாணி காமியில் ஊழியப் பயிற்சியில் இணைந்திருக்கும் 40 இளைஞர்களையும் தேவன் தம் வல்லமையினால் நிரப்ப... 17 தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... இரு கால்களிலும் பெலனிழந்து இரு வருடங்களாக நடக்கமுடியாமல் தவிக்கும் நோபா லக்ஷ்மிக்குக் கர்த்தர் சுகம் தர... பெல்பாரி ஆங்கிலப் பள்ளியின் கட்டட விரிவாக்கப்பணியின் தேவைக்காக ஜெபியுங்கள்.



## 17. ஒடிசா - ஹோ, சந்தாலி பகுதி

சந்தாலி ஜனங்களுள் 5 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். எதிர்ப்புகள் நடுவிலும் தாகூர்முண்டாவில் தேவ ஊழியம் வளருகின்றது. ஹோ விசுவாசிகளின் குடும்பக் கூடுகைக்குப் பின் நம் ஊழியங்களுக்குக் கிராமந்தோறும் மிகுந்த வரவேற்பு கிடைக்கப்பெறுகிறோம். புதிய ஊழியர்கள் 20 பேரையும் தேவன் தம் பணியில் வல்லமையாகப் பயன்படுத்துகிறார், ஸ்தோத்திரம்!

மயூர்பஞ்ச், கியோஞ்சர் மாவட்டங்களில் 6 தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானப் பணிகளுக்காக... பாத்புத்கா சபை ஊழியர் பர்ஜ் முர்முவுக்கு எதிராகச் செயல்படுவோரைத் தேவன் சந்திக்க... பிசாசின் பிடியிலுள்ள கியான் ஒரஞ்சன் சித்து

இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற... பாதுபேடா, குன்டாகுடூர் ஆகிய இடங்களில் சுவிசேஷம் கேட்டோர் உள்ளங்கள் மறுரூபமாக ஜெபியுங்கள்.



### 18. ஒடிசா - கந்தமால் மாவட்டம்

தசனிபாடாவில் தளம் திறக்கப்பட்டது; வாஞ்சையுள்ள ஆத்துமாக்களை அங்கே காண்கிறோம். ராகதி கிராமத்தில் நரேந்திரா, பிஸ்வாமித்ரா ஆகியோரின் உள்ளங்கள் சுவிசேஷத்தினால் புதிதானது. பனசாபதி நற்செய்திக் கூடுகையில் 31 பேர் பாவ அறிக்கை செய்தனர்; 3 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டனர்.

பாகதங்கிரியில் தொடரும் தேடுவோர் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்கள் பங்கேற்க... ராகதியில் ஆலயங்கட்டும் பிரயாசத்தில் தேவ நடத்துதலுக்காக... சுசாந்தா மல்லிக், ஜலிதா பிரதான் ஆகியோரின் குடும்பங்கள் விசுவாசத்தில் உறுதியடைய ஜெபியுங்கள்.



### 19. ஒடிசா - பரலாகமண்டி பகுதி

தெபசாஹி ஆராதனைக் குழுவின் சோரா விசுவாசிகள் தாங்களாகவே ஓர் தற்காலிக கூரை ஆராதனைக் கூடம் கட்டி பிரதிஷ்டைசெய்தனர். 7 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர். குராசாஹி தளத்தில் தேவ ஊழியத்திற்கு விரோதமாய் நின்ற பிரசாந்தா சாபர் குடும்பத்தைச் சிலுவையன்பு சந்தித்தது, ஸ்தோத்திரம்.

அயூபா கட்டா, தெர்மா கோமங்கோ ஆகிய ஊழியர்களின் குடும்பங்களைக் கர்த்தர் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதிக்க... கஞ்சம் ஜில்லாவின் 4 தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... பூரேபகடாவில் இன்னும் 3 குடும்பங்கள் இரட்சிக்கப்படவேண்டும், ஜெபியுங்கள்.



### 20. ஒடிசா - சம்பல்புரி பகுதி

மனநோயிலிருந்த ராகேஷ் ஜதாப் இயேசுவின் தொடுதலைப் பெற்றார். சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்த சுபாஷ் போதைப்பழக்கங்களுக்கு முற்றுப்புள்ளியிட்டார். குத்பாடா கிராமத்தில் பிசாசின் பிடியிலிருந்த லுச்சனா பதி இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற்றாள்; சாட்சிகூறுவதில் முன் நிற்கின்றாள்; துதியுங்கள்.

உதுபில்காவில் வசனம் செல்லும்படியான வாசல் திறக்கப்பட... லுமுர்ஜெனா கிராமத்தில் சமாதானத்திற்குத் தூரமாயுள்ள பிரதீப் குடும்பத்திற்காக... தகப்பனை இழந்த துயரத்தில் வாடியுள்ள இளைஞன் சமீர் நந்தாவைத் தேவன் ஆறுதல்படுத்த... சதேபூர், பலாஸ்பட் ஆராதனைக் குழுவினர் மூலம் அண்டை கிராமங்கள் கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.



### 21. சத்தீஸ்கடு - ராய்பூர் பகுதி

பேசமுடியாதிருந்த ரித்திகா மூன்று வருடங்களுக்குப் பின் வாய் திறந்து பேசுவதனால் குடும்ப உறுப்பினர்கள் இயேசுவை மகிமைப்படுத்துகின்றனர். புதிய விசுவாசி சவிதாவின் சாட்சியினால் வீட்டாரனைவரும் இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் பெலப்பட்டுள்ளனர். அராங் கிராமத்தினர் சுவிசேஷம் அறிவதில்

அதிக ஆர்வங்கொண்டுள்ளனர். 5 பேர் தங்கள் புதிய விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கைசெய்தனர்.

விபத்தில் கணவரை இழந்துள்ள சகோதரி பிரீத்தி சாகூவின் ஆறுதலுக்காக... அருண் குமார் யாதவ் என்பாருக்குத் தெளிவான கண்பார்வையைத் தேவன் தர... ராய்பூரின் தென் பிராந்தியக் கிராமங்களில் தளம் திறக்கும் பிரயாசங்கள் பலன் தர... மது காய்ச்சும் தொழிலைவிட்டு மனந்திரும்பிய ராம்ஜீ குடும்பத்தினருக்குக் கர்த்தர் புதிய தொழில் வாய்ப்பு தரும்படி ஜெபியுங்கள்.



## 22. சத்தீஸ்கடு - பிலாஸ்பூர் பகுதி

13 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். ஊழியக் கிராமங்களின் எண்ணிக்கை பிலாஸ்பூர் பிராந்தியத்தில் 159 ஆக உயர்ந்தது. சர்பால் சார்தி எனும் ஊழியரின் குடும்பத்தைக் கர்த்தர் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதித்தார். காசநோயிலிருந்து குணமடைந்த தேவ்நாத் டோப்போ இயேசுவுக்குச் சாட்சிபகருகின்றார், ஸ்தோத்திரம்.

ஊழியர் அனில் பாராவுக்கு எதிர்ப்புகள் நடுவில் கர்த்தரின் பாதுகாப்பு கிடைக்க... விசுவாசிகள் பெருகும் 3 ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலங்கள் வாங்கப்பட வேண்டும்... தினேஷ் குமார் மதுப்பழக்கத்தை விட்டு மனந்திரும்ப... பார்பாலி, முல்முலா தளச் சபையார் சுவிசேஷப் பணியில் தீவிரமாகச் செயல்பட ஜெபியுங்கள்.



## 23. மத்தியப்பிரதேசம்

சஞ்சராவில் சுவிசேஷ வேலைக்கு எதிராய்ச் செயல்பட்ட தீப் சந்த் என்பாரை இயேசு சந்தித்தார், புதுசிருஷ்டியாக்கினார். 19 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர். தியோரா கிராமத்தில் கபீராம் குடும்பம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானது. நாராயண் என்பாரின் மனமாற்றத்தினால் வீட்டாரனைவரும் மெய்ச்சமாதானத்தை இயேசுவில் பெற்றுள்ளனர்.

ஊழியர் குலாப் ராம் துர்பே என்பாரின் பக்கவாதப் பாதிப்பிலிருந்து கர்த்தர் சர்வாங்க சுகம் தர... பிஜோரா கிராமத்தார் கிறிஸ்துவின் வசனங்களில் மனம்பதிக்க... விசுவாசிகள் பெருகும் நாயீன்பூர் ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... பாக்சந்த், பிரேம் லால் ஆகிய ஊழியர்களின் பிரயாசத்தில் கர்த்தர் ஆத்துமக் கனிகளைத் திரளாய்த் தர ஜெபியுங்கள்.



## 24. குஜராத் - தாகோத் பகுதி

பக்கவாதத்தினால் கால்கள் முடங்கிப்போன லால்சிங் பாய் தாமோர் இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கிறார். ஹரிபுராவில் கர்த்தரின் சபை பிறந்தது. சுரேகாபேன், ஃபாத்திபேன் ஆகியோரின் வயிற்றுக் கட்டிகள் ஜெபத்தினால் நீங்கியது. 2 குடும்பங்கள் கிறிஸ்துவில் தங்கள் புதுவாழ்வை அறிக்கை செய்து, ஆராதனையில் கலந்துகொள்கின்றனர்.

தேவ்காட் பருயா வட்டாரத்தின் உள்ளான கிராமங்களில் தளங்கள் திறக்கும் முயற்சிகளுக்காக... மர்காலா கிராமத் தலைவரின் இருதயத்தில் கர்த்தர் இடைபட... இரு மாதங்களாகியும் வீடு திரும்பாத சுனிதா பேனைத் தேவன் மீண்டும் இல்லம் சேர்க்க... லகான்பூரில் ஆலயம் கட்டுவதற்கு சபை மூப்பர்கள் எடுக்கும் பிரயாசங்கள் பலன் தர ஜெபியுங்கள்.

## 25. குஜராத் - டாங்ஸ் மாவட்டம்



சிஞ்சிலி கிராமத்தார் சுவிசேஷப் பணிக்கு அழைப்பு விடுத்துள்ளனர். புதிய விசுவாசி அதுல்பாயைத் தொடர்ந்து வீட்டாரனைவரும் இயேசுவைப் பின்பற்றத் தீர்மானித்துள்ளனர். கேல் ஆலயக் கட்டுமானப் பணி தேவ கிருபையினால் நிறைவடைந்தது. சாலை விபத்தில் சிக்கிய சுனில்பாய் என்பாரின் ஜீவனைக் கர்த்தர் காத்ததற்காக ஸ்தோத்திரம்!

சபை மூப்பர்களின் இருதயங்கள் சுவிசேஷப் பணியில் ஏகோபித்து முனைந்து நிற்க... இயேசுவை விட்டுப் பின்வாங்கிப்போன தயாராம் பாய் மீண்டும் தேவ கரத்திற்குள் வர... 10 வருடங்களாகக் கர்ப்பத்தின் கனிக்காகக் காத்திருக்கும் கல்பனா பேன், கீதா பேன் குடும்பங்களுக்காக... அடிக்கடி பிசாசின் பிடிக்குள்ளாகும் சிங்கா பாய் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட ஜெபியுங்கள்.

## 26. மகாராஷ்டிரா



சல்கரா, அஜனிவாடா ஆகிய கிராமங்களில் வேத வசனங்களை வாஞ்சிப்போர் அதிகரித்துள்ளனர். புதிய விசுவாசி அர்ஜுனின் ஊழியம் வாயிலாக தியோனி கிராமத்தார் கர்த்தருக்குள் பெலப்படுகின்றனர். தியோல்காவ் தளத்தில் தேவாலயக் கட்டுமானப்பணி தேவத் திட்டப்படி வளர்ந்தேறுகின்றது. சோனிகாவ் எனுமிடத்தில் தாதாராம் குட்டே குடும்பத்தார் கர்த்தரையே சேவிக்க அர்ப்பணித்துள்ளனர், துதியுங்கள்.

சிக்மாரா கிராமத்தார் நற்செய்தியில் மனம்பதிக்க... விமல், நரேந்திராவின் ஜீவியம் கிறிஸ்துவில் மறுரூபமாக... பிஞ்சர்ஜாடி தளத்தாரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... பிசாசின் பிடியிலுள்ள தானாஜீ இயேசுவின் நாமத்தில் விடுதலையடைய ஜெபியுங்கள்.

## 27. தெலுங்கானா



நாகர்கர்னூல் மாவட்டத்தில் 20 கிராமங்கள் ஊழியத்திற்கென சர்வே மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 14 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர். கொண்டமடுகு மெட்டு எனுமிடத்தில் ஆராதனைக் குழு உதயமானது. உப்புநுந்தலா, கோடரிகுடாவில் தேவாலயக் கட்டுமானப் பணிகள் துவங்கியது, துதியுங்கள்.

அக்காரம் தளத்தின் விசுவாசிகளைக் கொண்டு அண்டை கிராமங்களில் கர்த்தர் ஆத்துமாக்களைத் தர... தர்னாம், மாச்சாரம் ஆகிய தள ஆலய வளாகங்களில் ஊழியர் தங்கும் அறைகள் கட்டப்படவேண்டும். யாதாதிரி, அடிலாபாத் ஆகிய மாவட்டங்களின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவைப்படுகிறார்கள், ஜெபியுங்கள்.

## 28. ஆந்திரப்பிரதேசம் - விஜயநகரம் சோரா



வேப்பமனுகுடாவில் 15 பேர் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்ததன் பலனாக, இக்கிராம விசுவாசிகளின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது. 2 புதிய ஆராதனைக் குழுக்களும், 2 புதிய வேதபாட வகுப்புகளும் கர்த்தரின் கிருபையால் துவங்கப்பட்டுள்ளது. 16 குடும்பங்களைச் சேர்ந்த 59 பேர்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுள்ளனர். 38 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

லிக்கிடியில் துவங்கப்பட்டுள்ள தையற்பயிற்சி வகுப்பில் இணைந்துள்ள 24 பேருக்காக... சந்திமனுகுடா மருத்துவ முகாம்களில் பங்கேற்ற 785 பேருக்கும் கர்த்தர் சர்வாங்க சுகம்தர... பொரந்தன்குடாவில் 55 விசுவாச ஸ்திரீகளுடன் இயங்கும் தெபோராள் குழுவில் மேலும் புதிய அங்கத்தினர்கள் இணைய... சப்பராய்குடாவில் வசனம் செல்லும் அநுகூல வாசல் திறக்கப்பட ஜெபியுங்கள்.



## 29. ஆந்திரப்பிரதேசம் - விஜயநகரம் தெலுங்கு

தாடிலோவாவில் நடத்தப்பட்ட தெருப்பிரசங்கத்தைத் தொடர்ந்து இல்லம் தோறும் வசனம் அறிவிக்கப்பட்டது. சினகுதமா, பக்குபேட்டா, கொத்தபாக்கம் ஆகிய மூன்று தளங்களில் விசுவாச ஸ்திரீகளின் ஊழிய ஈடுபாடு அதிகரித்துள்ளது. சீடிபள்ளி சுவிசேஷக் கூடுகை 40 பேர் முதன் முறையாக நற்செய்தியறிய ஏதுவாயிற்று. சங்கம்கட்டிவலசாவில் தேவன் தந்த புதிய ஆலயத்திற்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பான்டுலவலசாவில் இயங்கும் வேதபாட வகுப்பு, ஆராதனைக் குழுவாக மலர... விசுவாசிகள் பெருகும் பங்காருவலசா, ஜியாம்மவலசா தளங்களில் ஆலய நிலங்கள் வாங்கும் பிரயாசங்களுக்காக... கொண்டகன்ரேடு தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக.. கஜபதிநகரம் பகுதியின் 9 கிராமங்களில் நிறைவடைந்த திறந்தவெளிக் கூடுகைகளால் மிகுந்த பலன் உண்டாக ஜெபியுங்கள்.



## 30. கர்நாடகா

மதி கிராம விசுவாசிகள் ஐக்கியத்தில் ஆறு புதிய குடும்பங்களைக் கர்த்தர் இணைத்தார். கல்லுபந்தேயில் கர்த்தரின் பணிக்கு எதிராய் நின்ற நாகராஜுவைச் சிலுவை அன்பு சந்தித்தது. பக்கவாதப் படுக்கையில் இரு வருடங்களைச் செலவிட்ட சிவம்மாவுக்கு ஜெபம் சர்வாங்க சுகம் தந்தது, தொட்டசெல்லூருவில் இயேசுவின் நாமம் உயர்த்தப்பட்டது. 19 பேர் தளங்களில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர்.

மொலகல்மூர், சித்தயனகோட்டி ஆகிய தளங்களில் தேவாலயங்கள் எழும்ப... தேடுவோர் கூட்டங்களில் பங்கேற்ற 1750 பேரின் ஆத்தும இரட்சிப்புக்காக... பசவகல்யாண் கிராம விசுவாசிகள் தங்கள் சாட்சியின் மூலம் இன்னும் அநேகரை நீதிக்குட்படுத்த... சுகாதாரக் குடிநீர் வசதிகள் தளங்களின் அனைத்து கிராமங்களிலும் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.


22 மாநிலங்கள் - 120 மக்கள் / மொழி இனங்களைச் சேர்ந்த ஆயிரம் சுவிசேஷகர்கள் செல்லும்

1000 கிராமங்களை ஆசீர்வதிக்கும் நற்செய்திப் பெருவிழா

2020, மே 1, 2, 3 வெள்ளி, சனி, ஞாயிறு தினமும் மாலை 6:00 மணிக்கு

காய்கனி மார்க்கெட் மைதானம், தூத்துக்குடி
(வ.உ.சி. பெட்ரோல் பங்க் எதிர்ப்புறம்)



தலைமை / சிறப்புச்செய்தி:
Rt. Rev. Dr. S.E.C. தேவசகாயம்
பேராயர், CSI தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்

தேவ செய்தி:
சகோ. P.செல்வராஜ்
Chairman, Vishwa Vani Network

# நடப்புச் செய்திகள்

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட குழந்தைகளுக்கான நல்வாழ்வு அளிக்கும் திறன் படைத்த நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 131வது இடம் கிடைத்துள்ளது. குழந்தைகளுக்கு உகந்த சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கிய வாழ்வுக்கான நிலைத்தன்மை குறியீட்டில் 77வது இடத்தையும் இந்தியா பிடித்துள்ளது. உலக சுகாதார நிறுவனம், யுனிசெப், லான்செட் மருத்துவ இதழ் ஆகியவை இணைந்து உலகம்முழுவதும் 180 நாடுகளில் குழந்தைகளுக்கான நல்வாழ்வு, அவர்களுக்கேற்ற சுற்றுச்சூழல் பற்றி மேற்கொண்ட ஆய்வின் முடிவு இது! "இயேசுவே, இந்தியக் குழந்தைகள் அனைவரும் ஆரோக்கியமான நல்வாழ்வு பெற்று மகிழட்டும்".

உலகில் இதுவரை தோன்றிய தொற்று நோய்களின் வரலாறு முழுவதிலும், 'கருப்பு மரணம்' (Black Death) மிகவும் கொடியது. இது 14 ஆம் நூற்றாண்டில் 7.5 முதல் 20 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொன்றது.

2009ல் உருவான காய்ச்சல் தொற்று H1N1 மற்றும் '1918 இன்ஃப்ளுயன்சா தொற்றுநோய்' (ஸ்பானிஷ் காய்ச்சல்), உலக மக்கள் தொகையில் 11% முதல் 21% வரை பாதித்தது. இது முதலில் மெக்சிகோ மாநிலத்தில் அடையாளம் காணப்பட்டது.

தற்போது, உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸை உலகளாவிய தொற்றுநோயாக அறிவித்தது! COVID-19 வைரசால் 1,45,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வைரஸ் இதுவரை 5,429க்கும் மேற்பட்டோரை கொன்றது. 136 நாடுகள் மற்றும் 5 கப்பல்களை இத்தொற்று வியாதி பிடித்தது.

'வியாதியை உன்னைவிட்டு விலக்குவேன்' என்ற பரம மருத்துவரே, இப்புவிதனை கலக்கும் கொரோனா எனும் கொள்ளை நோயினின்று ஜனங்களை தற்காத்தருளும்.

## மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



கர்த்தருக்குள் எங்கள் அன்பு சகோதரரும், சென்னை- கொளத்தூர் வட்டார விஷ்வ வாணி ஊழியங்களுக்கு மிகுந்த ஆதரவு தந்த திரு. சதானந்தக்குமார் (வயது 65) அவர்கள் 28.02.2020 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். அன்பு ஐயாவின் ஜீவிய நாட்களுக்காக, வெகு மனத்தாழ்மையுடன் நிறைவேற்றிய ஊழியங்களுக்காகத் தேவனைத் துதிக்கிறோம். துணைவியார் திருமதி. நிர்மலா அவர்களுக்கும் இரண்டு பிள்ளைகளின் குடும்பங்கள், தாயாருக்கும் தேவ ஆறுதல் உண்டாக ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.

## கனிதரும் மரங்கள்...

விஷ்வவாணி பணியில் இருபத்து ஐந்து வருட ஊழியங்களை ஜெயத்துடன் நிறைவுசெய்து, தரிசனத் தடத்தில் நம்பிக்கையுடன் முன் நடக்கும் 45 ஊழியர்களையும் இயேசுவின் நாமத்தில் மனமுவந்து வாழ்த்துகின்றோம். கடந்து வந்த ஊழியப் பாதையில் இவர்களது அயராத உழைப்பு, அர்ப்பணத்துடன் கூடிய பிரயாசங்கள் யாவையும் நன்றியுடன் நினைத்து தேவனை ஸ்தோத்திரிக்கின்றோம். "ஆத்துமாக்கள் – ஆலயங்கள்" எனும் இருபெரும் ஆசீர்வாதங்களை இன்னும் இந்தியக் கிராமங்களில் இயன்றமட்டும் இவர்களது பணிவிடைகளால் காண்பதற்குக் கர்த்தர் சத்துவமும் பெலனும் ஞானமும் விவேகமும் கிருபையும் ஒத்தாசையும் நிறைவாய்த் தருவாராக; நீடித்த நாட்களால் திருப்தியாக்கி, ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பாராக!






# தொழுகிறோம் எங்கள் பிதாவை...



முடிவில்லாத இரக்கங்களும் அளவில்லாத கிருபைகளும் கர்த்தரால் எங்கள் களங்களில் பெருகுவதற்கு அடிப்படை காரணம், இயேசுவின் சுவிசேஷம்! ஒடிசா மாநிலம் சிலிகா பிராந்தியம் தெபசாஹி பணித்தளத்தின் துவக்க நாட்கள் துயர நாட்களாகவேயிருந்தது. சதா போதையிலும் ஜீவிய தடுமாற்றங்களிலும் சிக்கிக் கிடக்கும் கிராமங்கள் சுபிட்சமடையவேண்டுமே என்ற ஏக்கத்துடனும் கண்ணீருடனும் விதைத்த ஜீவ வசனங்கள் வீணாகவேயில்லை! நல்ல நிலத்தின் விதைகளாகவே கனி தந்தது! 15 குடும்பங்களுக்கு நம்பிக்கையின் ஜீவியம் தந்தது! இதுவரை இருந்த மதுப்பழக்கங்கள் மறைந்ததாலும், மகிமையின் சுவிசேஷத்தினால் மறுமலர்ச்சி வந்ததாலும் தெபசாஹி கிராமத்தின் முதல் தலைமுறை விசுவாசிகள் ஏகோபித்து, தங்கள் இரட்சகரைத் தொழுதுகொள்வதற்குத் தேவாலயம் ஒன்றைத் தங்கள் கடின உழைப்பினால் கட்டியுள்ளனர். சாட்சியின் சிகரமாய் உயர்ந்து நிற்கும் இவ்வாலயம் 15.02.2020 அன்று தெபசாஹி கிராம ஜனங்கள் அனைவரின் நல்வாழ்வுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டது. தெபசாஹியில் தொனிக்கும் ஜீவ சாட்சிகளால் பரலோகம் களிகூருவதாக! – ஊழியர் பான்டா ராய்த்தா

## தேவ தயவினால் தளங்கள் கண்ட 13 புதிய ஆலயங்கள்




01 Kannayaguda, AP - 16.02.20




02 Sangamgudivalasa, AP - 16.02.20



03 Mainabari, West Bengal - 16.02.20




04 Eethamanuguda, AP - 17.02.20




05 Zumavadi, Gujarat - 20.02.20

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. H/SD/182/2018-2020 - TAMIL | DATE OF PUBLICATION 20.03.2020
LICENSED TO POST WITHOUT PREPAYMENT - PMG/TS/HQR/SC-02/WPP/2018-2020




BOBBANGIPADU, A.P. - 24.02.20




NANDA CHOWDHURY KAMI, TRIPURA - 29.02.20




TARSADA, GUJARAT - 29.02.20



SALTHANGMANU PARA, TRIPURA - 01.03.20




SURYANARAYANA PURAM, AP - 02.03.20



KEL, GUJARAT - 06.03.20




DULKAI KAMI, TRIPURA - 08.03.20




PATHA MULUKALACHERUVU, AP - 08.03.20

---

*நம்பிக்கையின் அடையாளங்களாகிய ஆலயங்கள் நானாதிசைகளிலும்*
*நாளுக்கு நாள் உதயமாகுவதற்குக் கிருபையளிக்கும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*

---

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society ( Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. EDITOR: P. SELVARAJ. POSTING DATE: 23.03.2020